உ

நகரத்தார்

திங்கள் இதழ்
61, D, உசுமான்சாலை - சென்னை-17

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

பரிதாபி-ஆவணி, புரட்டாசி ஆகஸ்ட், செப்டம்பர்-1972

ஆசிரியர் புலவர்நாகசண்முகம்
பரிந்துரையாளர் எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு மூன்று — பேரேடு எட்டு, ஒன்பது

படிப்பும் — வேலையும்

உதவி செய்வது என்று வருகிறபொழுது இப்படி இதற்குச் செய்வது மட்டும்தான் உதவி என்று வரையறுத்துக் கொண்டால் அது சமூக வளர்ச்சிக்கு நன்மை பயப்பதாகாது.

எடுத்துக்காட்டாக, நமது சங்கங்களும்—சமூகப் பிரமுகர்களும் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகிறார்கள். இது காலத்தால் செய்யும் பேருதவியாகும்.

திருமணம் எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல திருமணத்திற்குப் பிறகு அவர்கள் வாழ்வதும் இன்றியமையாதது.

அப்படித்தான் கற்பது எவ்வளவு இன்றியமையாததோ அது போலக் கற்ற பிறகு அவர்கள் வேலை பெறுவதும் இன்றியமையாதது.

எனவே நம் சமூகப் பெருமக்களும் சங்கங்களும் கற்பதற்கு உதவுவது போலக் கற்றபின் வேலை கிடைக்க வழி வகுத்து உதவ வேண்டும். நம் நிறுவனங்களில் நம்மவர்களுக்கு வேலை நல்கிக் காக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

திருச்சி சுவாமிகள்

புலவர் நாகசண்முகம்

கைவிடுவானே கந்தன் !

'பழநிக்கு நடந்தவர்கள் பலன் பெருது திரும்புவதில்லை' என்று பெரு நம்பிக்கையோடு ஆதிநாராயணனும் ரெங்கநாயகி அம்மையும் பழநிப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அலையலையாய் வருகின்ற துன்பங்களையெல்லாம் மலைமேலிருந்து நீக்குகின்ற மாணிக்கத் தெய்வத்தை, கோவண ஆண்டியாகக் கொலுவிருக்கும் குமரக் கடவுளை அவர்கள் கண்குளிரக் கண்டார்கள்.

காட்சியோடு நின்றுவிடுவது வெறும் கவர்ச்சி! கட்புலன்களை எல்லாம் தன்வசம் ஆக்கிக் கொள்வது பேராற்றல். தன்வசம் ஆக்கிக் கொள்வதோடு அருள் புரிவதுதான் தெய்வம் !

காண்பாருக்கும், கருதுவாருக்கும், 'கந்தா' என்று கனிந்து அழைப்பாருக்கும் 'வந்தேன்! வரம் தந்தேன்!' என்று அருள் பாலிக்கும் திருமுருகன் உடல், பொருள், ஆவி மூவகையாலும் தன்னையே நினைத்துவந்த தம்பதிகளைக் கைவிடுவானே !

அருணகிரியான் பாடிய அந்த அன்பனிடம், அழகனிடம், வரம் வேண்டி அந்தத் தம்பதிகள் பழநியிலே 45 நாட்கள் தவமிருந்தார்கள். சாதுக்களின் மடங்களை நாடிச் சென்றார்கள். அவர்களுக்கெல்லாம் உணவிட்டார்கள். உயர்ந்தவர்களுக்கெல்லாம் உயர்ந்தவனை கந்தவேளின் பெருமையை அவர்கள் கூறக் கேட்டு உள்ளம் சிலிர்த்தார்கள்.

கனவல்ல — கந்தவேள் தந்த வரம்

45-ஆம் நாளிரவு திருமுருகன் நினைவாகவே அந்த அன்புத் தம்பதிகள் துயின்றார்கள். தம் வயிற்றில் திரிசூலம் ஒன்று வந்து விழுவதாகக் கனவு கண்டு ரெங்கநாயகி அம்மாள் அதிர்ச்சியுற்று எழுந்தார்கள். கணவனை எழுப்பினார்கள். கண்ட கனவைச் சொன்னார்கள். ஆதிநாராயணன் கனவின் பலன் புரியாது விழித்தார். பக்கத்தில் இருந்தவர்கள் அவர்களுடைய நிலைகண்டு பாசம் கொண்டார்கள். 'கனவல்ல அது! கந்தவேள் தந்த வரம்!' என்று அவர்கள் சொன்னார்கள்.

அப்போதும் ஒன்றும் புரியாத அந்தத் தம்பதியரை நோக்கி, ‘‘நீங்கள் கவலை கொள்ளாதீர்கள்! விரைவிலேயே உங்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கப் போகிறது. அதுதான் இந்தக் கனவுக்குப் பலன்!’’ என்று அவர்கள் விளக்கிச் சொன்னார்கள்.

வளம் பெருகியது — அனைவரும் வாழ்த்தினர்

ஆதிநாராயணனும் ரெங்கநாயகித் தாயும் ஏழை ஒருவன் எல்லையற்ற பொருள் பெற்றதைப் போல மகிழ்ந்தார்கள்.

மகான்களின் சித்தப்படியே மாணிக்கம் போல ஒரு மகன் பிறக்கப்போகிறான் என்பது மீண்டும் உறுதியாயிற்று. சிருங்கேரி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி சுவாமிகளைப் பார்த்து வணங்கும் பேற்றைத் தம்பதியர் பெற்றபோது ரெங்கநாயகித் தாய்க்குச் சுவாமிகள் கற்கண்டுப் பிரசாதம் வழங்கி ‘‘சத்புத்திரன் உண்டாவான்!’’ என்று கூறித் திருவுள்ளம் மகிழ்ந்தார்கள். எனவே சாதுக்களின் எண்ணம் பலிக்கும் காலம் நெருங்கிவிட்டது என்பதைத் தம்பதிகளே உணரத் தொடங்கினார்கள்.

ரெங்கநாயகித் தாயார் கர்ப்பவதியானார்கள். ஆதிநாராயணர் மனைவியைப் பொன்போலக் காத்து வந்தார்கள். பொன்னனைய மனைவி பொன்னான சூழ்நிலையில் வளர வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். எனவே தாமிரபரணி நதி பாயும் பாபநாசத் திருத்தலத்தின் பக்கத்திலும், அகத்தியர் கூட மலையின் அருகிலும் உள்ள விக்கிரமசிங்கபுரத்திற்கு மனைவியை அழைத்துச் சென்று அங்கேயே வாழத் தொடங்கினார்கள்.

‘நல்லாருக்காகப் பெய்கிற மழை உலகுக்கெல்லாம் பயன்படும்’ என்ற வள்ளுவர் கருத்தை நிலைநாட்டுவது போல ஆதிநாராயணரும் ரெங்கநாயகித் தாயும் விக்கிரமசிங்கபுரத்திற்குப் போனதிலிருந்து மழை பெய்தது. வளம் பெருகியது. ஊரில் ஒற்றுமை ஓங்கியது. ஆலயத்தில் மூன்று காலப் பூஜை முறையாக நடந்தது. விழாக்கள் சிறப்புற நடைபெற்றன. இதற்கெல்லாம் அந்த உத்தமத் தம்பதிகளே காரணம் என்று அறிந்த அந்த ஊர் மக்கள் அவர்களை வாழ்த்தினார்கள். அவர்கள் நல்லதோர் ஆண் குழந்தைக்குப் பெற்றோர்களாகி வாழ்வாங்கு வாழ வேண்டுமென்று இறைவனிடம் வேண்டிக் கொண்டார்கள்.

தெய்வக் குழந்தை பிறந்தது

உதயகாலத்தில் ஆதவன் நம் கண்களுக்குக் காட்சி தருவதற்கு நாழிகைப் பொழுதுக்கு முன்னரே இருள் மறையத் தொடங்குவது போல ஞானக் குழந்தை ஒன்று இந்த உலகில் பிறப்பதற்கு முன்னரே விக்கிரமசிங்கபுரத்து இருள் அகன்றது.

முதலில் இள ஞாயிருக தன் பயணத்தைத் தொடங்கும் ஆதவன் போகப்போகத் தன் பொற்கதிர்களால் உலகத்திற்கே ஒளியை அள்ளி வழங்குகிருன். அதுபோலவே அந்தத் தெய்வக் குழந்தை பிறந்த பிறகு உலகத்திற்கே ஞான அருள் ஒளியை வழங்கியதிலும் வியப்பில்லை அன்ருே?

பொன் கொடுத்தாலும் புதன் கிடைக்காது என்பார்கள்— பொன்னுக்கும் மேலாக அந்தத் தெய்வத் திருக்குழந்தை புதன் கிழமையன்றே இப் பூவுலகில் தோன்றியது.

புதனை ஞான காரகன் என்பார்கள். ஞானக் குழந்தை அக் கிழமையில் பிறந்ததுதான் என்ன பொருத்தம்!

பங்குனி மாதத்தில் அம்பிகைக்கு விழா எடுத்து வழிபடுகின்ற மரபினை நாடு எங்கும் காணலாம்.

அன்னை ராஜேஸ்வரியால் உருவான அக் குழந்தை பங்குனியில் பிறந்ததும் மிகப் பொருத்தமே!

விபவ ஆண்டு பங்குனித் திங்கள் ஏழாம் நாள் பூச நட்சத்திரம் மகர லக்கினத்தில் (1929-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20-ஆம் நாள் —சாலிவாகன சகாப்தம் 1851 கலியப்தம் 5029.) திருச்சி சுவாமிகள் எனப் பின்னுளில் பெயர் பெற்ற தெய்வக் குழந்தை பிறந்தது.

தன்னிகரற்ற வாரிசு

சாதாரணமாக உலகியலில் குழந்தை பிறந்தது என்ருலே மகிழ்ச்சிதான். ஆனல் ஊருக்கே வளம்தரத் தோன்றிய ஒப்பற்ற குழந்தை பிறந்ததை அறிந்ததும் ஊர்மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் இல்லங்களில் தெய்வம் தோன்றியதாகவே கருதினர்கள்.

ஆலயங்களில் வழிபாடுகள் நடந்தன. இல்லங்கள்தோறும் அன்னதானங்கள் நடந்தன.

நல்லாரை நல்லார் நாடுவதும் ஞானத்தை ஞானம் தேடுவதும் உலக இயற்கை.

தெய்வத் திருக்குழந்தை பிறந்தது முதல் விக்கிரம சிங்கபுரத்திற்கு அடிக்கடி சாதுக்கள் வந்தார்கள். சாந்தம் தவழும் ஞானக் குழந்தையைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஞானிகள் உலகியல் பற்று இல்லையாயினும் ஞானப் பற்று மிக்கவர்கள் அல்லவா? எனவே தமக்கு ஒரு வாரிசு உலகில் உதித்துள்ளது கண்டு அவர்கள் பூரித்தார்கள். பெருமிதத்தோடு அந்தப் பேரின்பக் குழந்தையை வாழ்த்தினர்கள்.

(தொடரும்)

30-2

கல்வி வளர நிதி உதவி

திரு. ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட மலாக்கா நாட்டுக் கோட்டைச் செட்டியார் சாரிட்டீசிலிருந்து 1972-73ம் ஆண்டிற்கு பல துறையிலும் பயிலும் மாணவர்களுக்கு ரூ. 20,600 உதவித் தொகையாக வழங்கி உள்ளார்கள் – அதன் விவரத்தைக் கீழே தந்துள்ளோம்.

1972-73ம் ஆண்டு நிதி உதவி செய்யப்படும் மாணவர்களின் பெயர், ஊர், படிப்பு, வழங்கும் தொகை விபரம்.

எண் :	பெயரும், ஊரும்.	படிக்கும் விபரம்.	வழங்கும் தொகை.	மொத்தத் தொகை.
1.	எஸ்பி. மீனாட்சி சுந்தரம், கண்டவராயன்பட்டி.	பி.யூ.சி.	125/-	
2.	அரு. லெட்சுமணன், தேவகோட்டை அஞ்சல்.	,,	125/-	
3.	ராம. முத்து, லெட்சிமிபுரம்.	,,	125/-	
4.	அ. ராமசாமி, புதுமனை, அரிமளம் அஞ்சல்.	,,	125/-	
5.	எஸ். அண்ணாமலை, சண்முகநாதபுரம்.	,,	125/-	
6.	வெ. வெங்கிடாசலம், அரிமளம்.	,,	125/-	
7.	வீர. முத்துசுப்பிரமணியம், அழகாபுரி.	,,	125/-	
8.	ந. பனையப்பன், வேந்தம்பட்டி.	,,	125/-	
9.	எஸ். அமிர்தவல்லி, இராயவரம்.	,,	125/-	
10.	ராம. மீனாள், கோனாபட்டு.	,,	125/-	
11.	சித. காசிமுத்துக்கருப்பன், இராயவரம்.	,,	125/-	

எண் :	பெயரும், ஊரும்.	படிக்கும் விபரம்.	வழங்கும் தொகை.	மொத்தத் தொகை.
12.	சே. மாலா, வலையப்பட்டி.	பி.யூ.சி.	125/-	
13.	மு. அருணாசலம், நேமத்தான் பட்டி.	,,	125/-	
14.	மெ. கண்ணப்பன், ஓ. சிறுவயல்.	,,	125/-	
15.	ச. சுப்பிரமணியன், கண்டவராயன்பட்டி.	,,	125/-	
16.	அ. உமையாள், விரையாச்சிலை.	,,	125/-	
17.	அரு. முத்தாயி, இராயவரம்.	,,	125/-	
18.	ராம. கண்ணும்பாள், கல்லல்.	,,	125/-	
			———	2,250/-
19.	பழ. சுப்பிரமணியன், இராயவரம்.	பி.ஏ. மூன்ரும் ஆண்டு	400/-	
20.	க. மெய்யப்பன், கல்லுப்பட்டி.	,,	400/-	
21.	லெ. ராமசாமி, கரூர்.	,,	400/-	
22.	அரு. இந்திராள், காரைக்குடி.	,,	400/-	
23.	வீர. முத்துலெட்சுமி, கோட்டையூர்.	பி.ஏ. இரண்டாம் ஆண்டு	400/-	
24.	ராம. அண்ணுமலை, தேவகோட்டை.	,,	400/-	
25.	இராம. சோமசுந்தரம், பாகனேரி.	பி.எஸ்சி. மூன்ரும் ஆண்டு	400/-	
26.	இராம. செல்லம், காரைக்குடி.	,,	400/-	
27.	பழ. வள்ளியம்மை, இராங்கியம்.	,,	400/-	
28.	எஸ். சோமசுந்தரம், அரிமளம்.	,,	400/-	

எண் :	பெயரும், ஊரும்.	படிக்கும் விபரம்.	வழங்கும் தொகை.	மொத்தத் தொகை.
29.	சி. கிருஷ்ணன், பாப்பினச்சேரி.	பி.எஸ்சி. இரண்டாம் ஆண்டு	400/-	
30.	குமா. சீத்தா, வரிசியூர், மதுரை-20.	,,	400/-	
31.	கரு. சொக்கலிங்கம், இராயவரம்.	,,	400/-	
32.	நா. மெய்யப்பன், அரியக்குடி.	,,	400/-	
33.	இராம. வள்ளியப்பன், நச்சாந்துபட்டி.	,,	400/-	
34.	பெரி. சிதம்பரம், அரிமளம்.	பி.காம். மூன்றும் ஆண்டு	400/-	
35.	பெரி. இராமனுதன், நச்சாந்துபட்டி.	பி. காம். மூன்றும் ஆண்டு.	400/-	
36.	அ. வீரப்பன், நச்சாந்துபட்டி.	பி. காம். இரண்டாம் ஆண்டு.	400/-	
37.	பழ. வேலப்பன், பலவான்குடி.	பி. எஸ்சி. முதல் ஆண்டு.	300/-	
38.	லெ. வயிரசன், நற்சாந்துபட்டி.	பி. எஸ்சி. முதல் ஆண்டு.	400/-	
39.	கரு. கதிரேசன், மானகிரி.	பி. எஸ்சி. இரண்டாம் ஆண்டு.	400/-	
40.	சி. இந்திரா, நச்சாந்துபட்டி.	பி. எஸ்சி. மூன்றும் ஆண்டு.	400/-	
41.	அழ. பழனியப்பன், கண்டனூர்.	பி. எஸ்சி. மூன்றும் ஆண்டு.	400/-	
42.	அ. அருணுசலம், கொ. லெட்சுமிபரம்.	பி. எஸ்சி. முதல் ஆண்டு.	400/-	

எண் :	பெயரும், ஊரும்.	படிக்கும் விபரம்.	வழங்கும் தொகை.	மொத்தத் தொகை.
43.	லெ. சிதம்பாம், அரிமளம்.	பி. எஸ்சி. முதல் ஆண்டு.	400/-	
44.	சொ. முத்துக்குமார், இலக்குமிபுரம்.	பி. ஏ. மூன்ரும் ஆண்டு.	400/-	
45.	அ. இரத்தினம், பனையப்பட்டி.	பி. ஏ. முதல் ஆண்டு.	400/-	
46.	சு. இராமநாதன், நச்சாந்துபட்டி.	பி. ஏ. முதல் ஆண்டு.	400/-	
47.	லெ. நாச்சியப்பன், கண்டனூர்.	பி. எஸ்சி. முதல் ஆண்டு.	400/-	
48.	ராம. கதிரேசன், விரையாச்சிலை.	பி. ஏ. முதல் ஆண்டு.	400/-	
49.	ராம. கி. இராமன், அரிமளம்.	பி. காம். முதல் ஆண்டு.	400/-	
50.	இராம. அழகப்பன், கோட்டையூர்.	பி. ஏ. முதல் ஆண்டு.	400/-	
51.	பெ. சோலையப்பன், இராமச்சந்திரபுரம்.	பி. காம். முதல் ஆண்டு.	300/-	
52.	ராம. சாந்தி, புதுப்பட்டி.	பி. எஸ்சி. முதல் ஆண்டு.	400/-	
53.	சுப. நாகம்மை, கோனபட்டு.	பி. ஏ. முதல் ஆண்டு.	400/-	
			——	13,800/-
54.	மெ. சு. இளங்கோ, சாந்தோம், சென்னை-28.	எம். பி. பி. எஸ். மூன்ரும் ஆண்டு.	750-	

எண் :	பெயரும், ஊரும்.	படிக்கும் விபரம்.	வழங்கும் தொகை.	மொத்தத் தொகை.
55.	ராம. தேனம்மை, கழனிவாசல்.	எம். பி. பி. எஸ். நான்காம் ஆண்டு.	750/-	
56.	அண. சுப்பிரமணியன், திருவல்லிக்கேணி, சென்னை-5.	எம். பி. பி. எஸ். மூன்றும் ஆண்டு.	750-/	
57.	அழ. பிரேமவித்தியா, இராமச்சந்திரப்புரம்.	எம். பி. பி. எஸ். இரண்டாம் ஆண்டு.	750/-	
			——	3,000/-
58.	குழ. லலிதா, இராயவரம்.	டி. காம். இரண்டாம் ஆண்டு.	200/-	
			——	200/-
59.	திரு. இன்பவல்லி, சூலூர்.	ஆசிரியர் பயிற்சி.	150/-	
60.	ரா. சிவகாமி, ஒ. சிறுவயல்.	,,	150/-	
61.	சுப. இராமாயி, நச்சாந்துபட்டி.	,,	150/-	
			——	450/-
62.	அ. வசந்தாள், புதுப்பட்டி.	,,	150/-	
63.	சா. வடிவுடையாள், காரைக்குடி.	,,	150/-	
64.	கே. அழகம்மை, சிராவயல்.	,,	150/-	
65.	லெ. காந்திமதி, கண்டனூர்.	,,	150/-	
66.	மெ. கோமதி, காரைக்குடி.	,,	150/-	
67.	சி. அழகம்மை, நேமத்தான்பட்டி.	,,	150/-	
			——	900/-
	மொத்தத் தொகை ரூ.			20,600/-



இப்படி வந்துவிட்டதே என்று கலங்குவது ஒருநிலை. இப்படித்தான் இருக்கும் என்ற மனப்பக்குவத்திற்கு வந்துவிடுவது மற்றொருநிலை.

கால் நடக்க முடியாமல் போனதுபற்றி ராமநாதன் செட்டியார் முதல் நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்கு வந்துவிட்டார்கள்.

இனிமேல் கால் விளங்காது என்ற முடிவிற்கு வந்து விட்டார்கள். இது மிகவும் வேதனையானதுதான் என்றாலும் இந்த முடிவால் அவர்கள் மனதில் படிந்திருந்த வேதனை படிப்படியாகக் குறைந்தது.

நிறைவு குறைவாககிறபோது வேதனைதான் – ஆனால் குறையே நிறை என்று கருதிவிட்டால் பிறகு அதுவே நிறைவுதானே?

கொழுந்தனார் மகன் என்றாலும் தம் சொந்தப் பிள்ளைகளைவிட ராமநாதன் செட்டியாரிடம் அதிகப் பற்று வைத்திருந்த காரணத்தால் ராமாயி ஆச்சி மட்டும் அடிக்கடி வந்து இராமநாதன் செட்டியாரைப் பார்த்துப் போனார்கள்.

ஒருநாள் ராமநாதன் செட்டியாரைப் பார்த்து விட்டு அவர்கள் திரும்பியபோது அவர்களை வழியனுப்ப அந்த அறையிலிருந்து சீதை ஆச்சி வெளியே வந்தார்கள்.

மேல் வீட்டிலிருந்து கீழே கல்யாணக் கொட்டகை மீது அவர்கள் இருவரின் பார்வைபட்டபோது பெரிய ஆச்சரியம் அங்கே காத்திருந்தது. அதிர்ச்சி என்றே அதைக் கூறலாம்.

காசிச் செட்டியாரும் மங்கை ஆச்சியும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு கணம் ராமாயி ஆச்சியும் சீதை ஆச்சியும் செயலற்றவர்கள் ஆனுர்கள். மறுகணமே தம்மைச் சமாளித்துக்கொண்ட ராமாயி ஆச்சி அங்கிருந்த படியே ''காசி வந்தியா – மங்கை வந்தியா'' என்று வரவேற்ருர்கள்.

அந்தப் பெயர்களே சீதை ஆச்சிக்கு பெரிய வெறுப்பை ஏற்படுத்தின – மீண்டும் ஒருதரம் அவர்கள் தம்பியையும் மங்கை ஆச்சியையும் பார்த்தார்கள்.

பொருமைக்குப் பெயர் பெற்ற அவர்கள் உள்ளத்தில் ஆத்திரம் நெருப்பாக எரியத் தொடங்கியது. ''வந்தவுகளை வாங்கண்ணு கேளு ஆத்தா'' என்று மெல்லிய குரலில் சீதை ஆச்சியைப் பார்த்து ராமாயி ஆச்சி மெல்லக் கூறினுர்கள்.

சீதை ஆச்சி முகம் குங்குமமாகச் சிவந்தது. ''அயித்தை உங்களுக்குக் கோடி புண்ணியம்; நல்லாயிருப்பிய கீழே போயி அவுகளை முதலே வெளியே போகச் சொல்லுங்க'' என்று கடுமையான குரலில் ஆனுல் தம் கணவனுக்குக் கேட்டுவிடாத மெல்லிய குரலில் அவர்கள் கூறினுர்கள்.

கல்யாணக் கொட்டகையில் கணவனேடு வந்து நின்ற மங்கை ஆச்சி, சீதை ஆச்சி ''வந்தியா'' என்று கூடக் கேட்காமல் இருப்பதையும் அவர்களிடம் ராமாயி ஆச்சி கூறுவனவற்றையும் குறிப்பால் அறிந்து கொண்டு ''எம்புட்டுப் பணமிருந்தாலும் வந்தவுகளை வாங்கண்ணு கேட்கலாம்'' என்று கூறினுர்கள்.

மங்கை ஆச்சியின் திமிரான பேச்சைக் கேட்டு சீதை ஆச்சி உள்ளம் கொதித்தது.

''அயித்தை நல்லா இருப்பீங்க, அவங்களைப் போகச் சொல்லுங்க'' என்று கூறிவிட்டு வேகமாக அவர்கள் இராமநாதன் செட்டியார் படுத்திருந்த அறைக்குள் போய்விட்டார்கள்.

''இப்படியெல்லாம் நடக்குமுண்ணுதான் நான் வரமாட்டமுண்ணு சொன்னே, கேட்டியா'' என்று காசிச் செட்டியார் தம் மனைவியைப் பார்த்துக் கூறினுர்கள், கூறினுர்களா குதித்தார்கள்.

''ஊரு ஒலகம் சொல்லுமேன்னு உதுத்துப்புட்டு வந்தோம்...ஊரா ஒலகத்திலே ஒருத்தகூட ஒங்க ஆச்சி மாதிரி இப்பிடி ஒதிக்கித் தள்ள மாட்டாக...'' என்று மங்கை ஆச்சிகாசிச் செட்டியாரைப் பார்த்துக் குரல் கொடுத்தார்கள்.

மங்கை ஆச்சி சத்தம் போட்டுப் பேசியது ராமாயி ஆச்சிக்கு எரிச்சலை உண்டாக்கியது. காரணம் ராம

நாதன் செட்டியார் உடல்நலம் இல்லாமல் படுத்ததிலிருந்து அந்த வீட்டில் யாருமே எதற்குமே சத்தம் போட்டுப் பேசுவதில்லை. அது அவர்களுக்குத் தொந்தரவாக இருக்கும் என்பதே அதற்குக் காரணம்.

‘‘மங்கை...கொஞ்சம் மெல்லப் பேசு’’, என்று ராமாயி ஆச்சி மெல்லிய குரலில் கூறினார்கள்.

‘‘என்ன...பெரியத்தா பயமுறுத்திறிய? இங்கே வந்ததுக்கு வாயக்கூடத் திறக்கப்பிடாதுன்னு சொல்லுவிய போலிருக்கே?’’ இந்த வார்த்தைகளையும் மங்கை ஆச்சி சத்தம் போட்டே கூறினார்கள். ராமாயி ஆச்சிக்குக் கோபம் பெருகியது.

‘‘வாயைத் தொற...மெல்லத் தொற...நா என்ன சொல்றமுன்னு வெளங்காமப் பேசாதே...இப்பத்தான் ராமையா தூங்குறான்...அவனைக் கௌப்பிவிட்ருதே...’’ என்று அவர்கள் கடுமையான குரலில் கூறினார்கள்.

‘‘அடியாத்தாடி...அப்படிக் காப்பத்றியளா? நல்லாக் காப்பாத்துங்க! நாங்களும் அவுக நல்லாருக்கணும்னுதான் நினைக்கிறோம்! யாரு தூக்கி வச்சுகிட்டு என்ன பண்ண? அவன்ல கண் தொறந்து பாக்கணும்? ஆயுசைக் கொடுக்கணும்? இதுக்கென்னத்துக்கு பெரியத்தா நீங்க இம்புட்டு ஆத்ரப்படறிய? பல்லக் கடிக்கிறிய? ஒடம்புக்கு முடியாதவுக இருக்கிற வீட்டுலே எப்பிடி நடந்துக்கணும்னு எங்களுக்கும் கொஞ்சம் தெரியும்!’’ என்று மங்கை ஆச்சி எகத்தாளமாகப் பேசினார்கள். இப்பொழுது அவர்கள் குரல் கூடியதே தவிரக் குறையவில்லை, சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் குரல் மாடிவரை எட்டியது. ராமநாதன் செட்டியாருக்குத் தம்முடைய குரல் கேட்கவேண்டும். அவர்கள் எழுந்து வந்து பார்க்க வேண்டும். அவர்கள் பார்த்துவிட்டால் எப்படியும் அங்கே காலூன்றிவிடலாம் என்று மங்கை ஆச்சி நினைத்தார்கள். பாம்பின் கால் பாம்பு அறியாதா? பத்து மங்கை ஆச்சிக்குச் சமம் அல்லவா ராமாயி ஆச்சி? ஏதோ உள் நோக்கத்தோடு மங்கை சத்தம் போட்டுப் பேசுகிறாள் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்!

அதே சமயத்தில் மாடியில் ராமநாதன் செட்டியார் அறையிலிருந்து வேதனையோடு வெளியே வந்த சீதை ஆச்சி இன்னும் அவர்களை இங்கே வைத்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே என்ற குறிப்போடு ராமாயி ஆச்சியைப் பார்த்தார்கள்.

‘நீ கவலைப்படாமல் உள்ளே போ! நான் பார்த்துக் கொள்கிறேன்’ என்று சைகை காட்டிய ராமாயி ஆச்சி பின்கட்டுப் பக்கம் சென்று சமையற்காரக் கருப்பையா

விடம், ரகசியமாக ஏதோ கூறிவிட்டு, அவனைக் கூட்டிக் கொண்டு உள்ளே வந்தார்கள்.

காசிச் செட்டியாருக்கும் மங்கை ஆச்சிக்கும் கேட்கும்படியாக "கருப்பையா! ரெண்டு பேருக்குச் சேத்துச் சமை! மொதல்லே காப்பி கொண்டுக்கினு வா!" என்று கூறினார்கள்.

"சரியாச்சி!" என்று கருப்பையா பணிவோடு கூறினான்.

"வாங்கன்னு கேக்காதவுக வீட்ல காப்பி என்ன? சாப்பாடு என்ன? நாங்க அப்பிடி ஒண்ணும் பொச கெட்டுக் கெடக்கலே" என்று மங்கை ஆச்சி கூறினார்கள்.

"தான் ஆடாட்டியும் சதை ஆடும்னு சொல்லுவாக! என்னதான் ஆயிரம் இருந்தாலும் சொந்தம் விட்டா போகும்? சீதைதான் புரியாம வாங்கன்னு கேட்காம விட்டுட்டாலும் நம்மளும் ஒதறித் தள்ளிட்டுப் போப்டாது...வாங்க அப்படி முன்னால போவோம்!" என்று கூறிவிட்டு ராமாயி ஆச்சி முகப்பை நோக்கி நடந்தார்கள்.

மங்கை ஆச்சிக்கு உள்ளூர ஒரே மகிழ்ச்சி! அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் முகத்தைக் கடுகடு வென்று வைத்துக்கொண்டு ராமாயி ஆச்சியைப் பின் தொடர்ந்தார்கள், காசிச் செட்டியார் மனைவியைப் பின் தொடர்ந்தார்கள்.

இவர்கள் ஒருவரையொருவர் பின் தொடர்ந்தது சரி! இவர்களைச் சமையற்காரக் கருப்பையா ஏன் பின் தொடர்ந்தான்!!

ராமாயி ஆச்சி, மங்கை ஆச்சி, காசிச் செட்டியார் மூவரும் கலியாணக் கொட்டகையைத் தாண்டி அதற்கு அடுத்த ஹாலைக் கடந்து முகப்பை அடைந்ததும் ஹாலுக்கும் முகப்புக்கும் இடையே உள்ள கதவைச் சாத்திக் கருப்பையா பூட்டினான். ராமநாதன் செட்டியார் வீட்டுப் பூட்டுச் சாதாரணமான பூட்டா என்ன? வில்லுப் பூட்டு! இரண்டு பூட்டுக்கும் இரண்டு மணி அடித்தது.

முகப்பை அடைந்த மங்கை ஆச்சியும் காசிச் செட்டியாரும் அதிர்ச்சியடைந்து கதவைத் திரும்பிப் பார்த்தார்கள். மங்கை ஆச்சிக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

"என்ன பட்டுக்கெடப்பான்......கதவைச் சாத்திப் பூட்டிக்கினு போருன்?" என்று அவர்கள் சீறிஞர்கள்.

"அந்தப் பட்டுக்கெடப்பாஃனப் பூட்டிக்கினு போகச் சொன்னது நாந்தாண்டி! காப்பிக்கும் சோத்துக்கும் பொசகெட்டுக் கெடக்கலேன்னு சொன்ன பொசகெட்டவளே! ராமஞ் செட்டிவிட்டுப் பணம் மட்டும் இனிச்சுதாடி? கடை வக்கச் சொன்ன தண்டத்துக்கு அம்புட்டையும் முழுங்கிப்புட்டு...பொசகெட்டவ இல்லேயாம்! புத்திகெட்டவளே!" என்று ராமாயி ஆச்சி பல்லைக் கடித்துக் கொண்டு சீறிஞர்கள்.

"என்ன அய்த்தே சொன்னிய"? என்று காசிச் செட்டியார் சீறியபடியே ஒரு அடி முன் வைத்தார்கள்.

"என்னடா......அடிக்கிறவனுட்டம் வர்றே? வெளக்க மாத்தே எடுத்துக்கினு அடிச்சேன்னு நீயும் ஒம் பொண்டாட்டியும் தஞ்சாவூர் ஆத்துல போயி விழுகணும்...என்று ராமாயி ஆச்சி கூறிஞர்கள்.

"அளந்து பேசு! அது இதுன்னு பேசுனியன்னு என்ன நடக்கும்னு தெரியாது! கெழடிக்கு அம்புட்டுத் திமிரா?" என்று மங்கை ஆச்சி சீறிஞர்கள்.

"கெழடி என்னடி கெழடி? கொமரியா இருக்கமேன்னு கொண்டாட்டம் போடுறியா? எனக்கு ஆளுப் பேரு இல்லேன்னு நெனச்சுக்கிறு ஆட்டம் போடுறியா? எம் பேரன் சிங்காரத்தைக் கூப்பிட்டா ஒன்னேச் சந்து சந்தா வெட்டிக் கொழம்பு வச்சு சீட்டுக் கொட்டகயில சீட்டுப் போடுறுங்களே அவங்களுக்கு விருந்து வச்சிருவான்டி! கலியாணக் கொட்டகைக்குள்ள இருந்து கத்திறு ராமையா வருவான்...எரக்கப்பட்டவன்... 'வந்தவுக இருந்துட்டுப் போகட்டும்'னு சொல்லுவான்! இன்னும் சொச்சம் மிச்சத்தையும் தின்னுட்டுப் போகலாம்னு பாத்தியளா?" என்று ராமாயி ஆச்சி கேட்டார்கள்.

"தின்னுட்டம்......தின்னுட்டம்கறியே! நாங்க தின்னுருந்தா எங்கஃாயில்ல சாமி கேட்கும்? ஏன் ஒங்கொழுந்துறு மகன் கால் வெளங்காமக் கெடக்காக?"

"கெடக்காண்டி! எந்திரிப்பான்!" முருகன் மனசுல என்னத்தையோ வச்சுக்கினு வெளேயாடுருண்டி! அவன் புள்ள ராமையாவோட வெளேயாடுருன்டி! ஒன் வீட்டுக்கு வெளேயாட்டா வரமாட்டாண்டி! வெளேயா வருவான்! வேலாயுதமா வருவான்! ஓம்காரமா இருக்க வரமாட்டான்டி! ஒன்னே ஒடிக்க

வருவான் என்று ராமாயி ஆச்சி சாமி வந்தவர்கள் போலக் கூறினர்கள்.

இதைக் கேட்டதும் மங்கை ஆச்சியும் காசிச் செட்டியாரும் சற்று அயர்ந்தார்கள். இந்த நிலையில் முகப்புப் படிக்கட்டிலிருந்து 'அப்பத்தா!' என்ற குரல் கேட்டு ராமாயி ஆச்சி திரும்பினர்கள். மற்ற இருவரும் அந்தத் திசையைப் பார்த்தார்கள்.

விளக்குமாறும் கையுமாக அங்கே சிங்காரம் நின்று கொண்டிருந்தான், "அப்பத்தா...இந்தாங்க உங்க ஆயுதம்!" என்று கூறிக்கொண்டே ராமாயி ஆச்சியை நோக்கி வந்தான்.

இனிமேல் நின்ருல் விபரீதம் நிகழும் என்பதை உணர்ந்த காசிச் செட்டியார், வாங்கிறேன்! தரங் கெட்டவுகளோட நமக்கென்ன பேச்சு?" என்று கூறி விட்டு வேகமாக வெளியே நடந்தார்கள், வேறு வழி யற்ற மங்கை ஆச்சியும் ஏதேதோ முனங்கிக் கொண்டே அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

பெரிதாக ஒரு முறை சிரித்த சிங்காரம், "என்னப்பத்தா சாமி வந்த மாதிரி?" என்று கேட்டான்.

"சாமி எங்கேருந்துடா அப்பச்சி வருது? முருகன் நம்ம தலைமாட்டுலதானே இருக்கான்? அப்பச்சி! ஒருத் தனுக்கு முந்தானி போட்ட நான் சொல்றேன்...இந்த மங்கைய முருகன் ஆட்டாம விடமாட்டான்! கசப்பா இருக்கிற மருந்தைக் குடிக்கலாம்! இனிப்பா இருக்கிற விஷத்தைக் குடிக்கப்படாது! பணத்திமிரில்ல அந்தக் கழுதெ என்னென்னத்தெயோ பேசுது? ராமையா விட்டுச் சொத்தையா அவுக எடுத்துருக்காக? முருகன் வுட்டுச் சொத்தையில எடுத்துருக்காக? வெணெ வெதச் சவுக வேற என்னத்தெ அப்பச்சி அறுக்க முடியும்? வா...அவுக தொலைஞ்சிட்டாகங்கறதைச் சீதைகிட்டே சொல்லிப்பிட்டுப் போவோம்!" என்று கூறியவர்கள் பேரனை அழைத்துக்கொண்டு பக்கத்துப் பாதை வழியே பின்கட்டை நோக்கி நடந்தார்கள்.

(தொருடம்)

இனிக்கும் செய்தி

திருச்சி நகரத்தார் சங்கத்தார் ஒப்பற்ற உதவி ஒன்றைச் செய்ய முன்வந்துள்ளார்கள்.

திருச்சி நகரவிடுதியில் வந்து திருமணத்தை நடத்துபவர்களுக்கு கீழ்க்காணும் உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளார்கள்.

மணமக்களுக்கு வேட்டி, சேலை, பெண்ணுக்கு அவசியமான நகைகள் இவற்றைக் கொடுப்பதுடன் இரு வீட்டாரின் உறவினர்களுக்கும் காலைப் பலகாரம், மதியம் உணவுடன் திருமணத்தை சங்கத்தார் நடத்திவைப்பார்கள்.

திருச்சி நகரவிடுதியில் வந்து திருமணத்தை நடத்த விரும்புகிறவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி சங்கத்தார் கேட்டுக் கொள்கிறார்கள்.

நகரத்தார் சங்கம்

என் 2, ஒத்தமால் தெரு,

திருச்சி - 2

இதைப் படியுங்கள் !

பழநி சிப்பிரமணிய சுவாமி கோயிலில் முடிக்காணிக்கைமூலம் வரும் வருட வருமானம் எவ்வளவு தெரியுமா ?

மூன்று லட்சங்கள்

நம் நாட்டில் காருக்கு மனுப் போட்டுவிட்டுக் காத்திருப்போர் தொகை எவ்வளவு ?

இவ்வளவு !

அம்பாசிடர்	37959
பியட்	49911

1971ல் விற்பனையான கார்கள் விவரம் :

அம்பாசிடர்	24741
பியட்	12733
ஹேரால்டு	745



இன்ப நினைவுகள்

புலவர் நாகசண்முகம்

நினைப்பவையெல்லாம் நடந்துவிட்டால் மனிதன் தெய்வமாகி விடுகிறான் : அல்லது அசுரனாவிடுவான்.

இவையிரண்டும் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் மனித இனத்திற்குத் தோல்விகள் காத்துக் கிடக்கின்றன.

எம். ஏ. தியாகராசன் அவர்கள் எனது நாடகத்தை அவர் தொடங்கிய ராஜம் பிக்சர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் படமாக்க

நினைத்தபோது இக்கட்டான சோதனையொன்றிற்கு அவர் இலக்கானார். அப்பொழுது (1958) கச்சா ஃபிலிம் கிடைக்காததால் கடுமையான கட்டுப்பாடு நிலவி வந்தது. புதிய படங்களுக்கு அனுமதியளிப்பதையே தென்னிந்தியத் திரைப்படச் சங்கம் நிறுத்தி வைத்திருந்தது. எனவே அவர் தன் சகோதரருடைய நிறுவனத்தின்மூலம் (M. A. V. பிக்சர்ஸ்) படத்தை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார். 'தம்பி தங்கக் கம்பி' கதையில்—அதாவது எதிர்க்கட்சி கதையில் கதாபாத்திரங்கள் மிகுதியாக இருக்கிறது என்ற காரணத்தால் அது படமாக்குவது கைவிடப்பட்டது.

'தம்பி தங்கக் கம்பி' கதையைக் கைவிட்டதுபோல என்னையும் கைவிட்டுவிடக்கூடாது என்ற கோரிக்கையைத் தியாகராசன் அவர்கள் முன்னாலே நான் வைத்தேன். சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கேற்ப இதுபோலக் கைவிடுதல் நிகழ்ச்சிகள் திரைப்படத் துறையில் சர்வ சாதாரணமானவை என்றாலும் அதை மீறித் தியாகராசன் அவர்கள் எனக்குத் தொடர்ந்து பணி தருவதாக உறுதி கூறினார்கள். நாட்டு வைத்தியர் ஒருவரையும் டாக்டர் ஒருவரையும் மையமாக வைத்துக் கதையொன்றை உருவாக்கி வேணு அவர்களிடமும் தியாகராசன் அவர்களிடமும் அதற்கு ஒப்புதல் பெற்று அதைத் திரைக்கதையாக உருவாக்கிக் கொடுத்தேன். அப் படத்தில் மனோகர், தேவிகா, டி. கே. ராமச்சந்திரன், வி. கே. இராமசாமி ஆகியோர் முக்கியமான கதாபாத்திரங்களை ஏற்றார்கள். அப் படத்திற்குப் 'பாஞ்சாலி' என்று பெயரிட்டார்கள். படம் வெளியாவதற்குள் நாட்டு வைத்தியம், டாக்டர் வைத்தியம் என்ற அடிப்படை தத்துவம் முற்றிலும் மாறி அன்றையச் சூழ்நிலைகளுக்கு ஏற்பப் பல்வேறு மாற்றங்களுக்கு ஆளாகி ஒன்பது படங்களில் ஒரு படமாக ஒரு தீபாவளியன்று அது வெளிவந்தது. அன்றுதான் 'பாகப்பிரிவினை' படமும் வெளியாயிற்று. முடவன் ஒருவனைக் கதாநாயகனாகக் கொண்ட அந்தப் படம் அன்று வெளிவந்த ஏனைய எட்டுப் படங்களையும் முடமாக்கி மாபெரும் வெற்றி பெற்றது. 'பாஞ்சாலி' படம் படுதோல்வியடைந்தது. ஆனாலும் அதனால் ஏற்பட்ட வேதனைகளையெல்லாம் பாகப்பிரிவினையில் கவிஞர் எழுதிய பாடல்களைக் கேட்டு நான் மறக்க முயன்றேன். 'ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாய்?', 'தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்', 'தாழையாம் பூ முடித்து' முதலிய கவிஞரின் பாகப்பிரிவினை பாடல்கள் சாகா வரம் பெற்றவை. உடல் ஊனம் மட்டுமல்லாமல் உள்ளத்தால் ஊனமுற்றவர்களுக்கும் உறுதி தருபவை. கவிஞரின் தென்றலில் பரிசு பெற்ற நாடகத்தைப் படமாக்க முயன்றதையொட்டிய நிகழ்ச்சிகளை நான் விவரித்தேன். நான் 'பாஞ்சாலி' பட முயற்சியில் தோல்வியடைந்தாலும் என்னை எப்படியும் திரைப்படத் துறையில் புகுத்தியே தீருவது என்று கங்கணங் கட்டிக்கொண்டு எம். ஏ. வி. பிக்சர்ஸ் நிறுவனத்தில் நான் பணியாற்ற உதவிய கே. பி. எஸ். சேதுராமன் செட்டியார் அவர்கள், புலவர் பெரி. சிவனடியான் செட்டியார் அவர்கள், சேலம் பாண்டியன் பேப்பர் சிவலிங்கம் அவர்கள் ஆகியோருக்கு என் நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் நாடகம் பரிசு பெற்ற காலத்தில் எல்லாம் கவிஞர் அவர்கள் காரைக்குடியில்தான் வாழ்ந்து வந்தார்கள். வாரத்திற்கு ஒரு முறையோ இரு முறையோ சென்னைக்குப் புறப்படுவார்கள். ஒரு

ஃபியட் கார் வைத்திருந்தார்கள். அதில்தான் சென்னை வந்து வருவார்கள். நான் மேலைச்சிவபுரியிலிருந்து அடிக்கடி காரைக் குடிக்கு வந்து அவர்களைச் சந்தித்து வந்தேன். அப்பொழுதுதான் அந்த நாடகத்தை என். எஸ். கேயிடம் கொடுத்துவிட வேண்டும் என்ற எண்ணத்திற்குக் கவிஞர் அவர்கள் வந்தார்கள். அதன் பொருட்டு என்னையொருமுறை சென்னைக்கு வருமாறு கவிஞர் அவர்கள் அடிக்கடி அழைத்துக் கொண்டிருந்தார்கள். இதற் கிடையே 'தென்றலி'ல் நான் அவ்வப்போது சில இலக்கியக் கட்டுரை களை எழுதிக் கொண்டிருந்தேன். அந்தக் கட்டுரைகள் கவிஞரை வெகுவாகக் கவர்ந்தன. எனவே என்னைத் 'தென்றலில் துணை ஆசிரியராகப் பணியாற்றும்படியும் அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லாவற்றிற்கும் ஒரு முறை சென்னை சென்றுவருவது நல்லது என்று நினைத்தேன். கவிஞர் சென்னையிலிருக்கும் செய்தியறிந்து ஒரு முறை புறப்பட்டேன்.

சென்னைக்கு முதல் முறையாக வந்ததால் ஆர்வமும் அச்சமும் என்னுள்ளத்தில் நிறைந்திருந்தன. நண்பர்களின் ஆலோசனைப்படி நான் முதலில் நேராக நகரவிடுதிக்குத்தான் சென்றேன். அங்கிருந்து 'தென்றல்' அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தேன். பொறுப்பாசிரிய ராக இருந்த தென்னரசு அவர்களும், துணையாசிரியர்களாக இருந்த தமிழ்ப்பித்தனும் மற்றவர்களும் என்னை மிகவும் அன்போடு வரவேற் ருர்கள்.

'தென்றல்' அலுவலகம் பக்தர்கள் வந்து போகிற சத்திரம் போலக் கட்சிக்காரர்கள் வந்துபோகிற கேந்திரமாக விளங்கியது என்ருல் மிகையாகாது. இன்றைய சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு இராசாராம் அவர்களும் மற்றும் கட்சியின் முன்னேடி களாக விளங்குகின்ற பலரும் கவிஞர் இல்லாதபோதும் தென்றல் அலுவலகத்திற்கு வந்து போகின்ற காட்சிகள் இன்றும் என் உள்ளத் தில் பசுமையாக இருக்கின்றன.

நான் சென்னை வந்து சேர்ந்த அன்று இரவுதான் கவிஞரைச் சந்தித்தேன்.

'தென்றல்' அலுவலகத்திற்கு மிகவும் அருகில் இருந்த 'ஒட்டல் இண்டியா' என்ற தங்கும் விடுதியில்தான் கவிஞர் அவர்கள் சென்னை வந்தால் தங்குவார்கள் என்ருலும், அந்த விடுதியிலோ, பத்திரிகை அலுவலகத்திலோ எளிதாகப் பார்க்க முடியாத அளவு பல்வேறு பணிகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

என் வருகையறிந்து மகிழ்ந்த அவர்கள் மறுநாள் கலைவாணரைச் சந்திக்கலாம் என்று கூறினுர்கள். மறுநாள் கலைவாணர் அவர்கள் ஊரில் இல்லை என்ற செய்தியைக் கூறிய கவிஞர் அவர்கள் 'சிலநாள் சென்னையிலேயே தங்கிப் போகலாம்' என்று கூறினுர்கள். கலை வாணர் அவர்களைப் பார்க்க முடியவில்லை என்ருலும் கவிஞர் அவர் களைப் பார்த்ததும் அவர்கள் அலுவலகத்திலேயே சிலநாள் தங்கு கின்ற சூழ்நிலை ஏற்பட்டதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தன.

(தொடரும்)

எரியும் மெழுகுவர்த்திகள் எரிகின்றன !

அழகாபுரி இளங்கோவன், (பி. ஏ.,)

அண்ணாமலைநகர்

[அன்னைத் தமிழைப் பொன்னேபோல் போற்றி வளர்த்த பெருமை நமதருமைக் கவிஞர்களையே சேரும். தமிழகத்தின் இருபதாம் நூற்றாண்டுக் கவியரசர் அண்ணன் கண்ணதாசன் என்று சொன்னால் அது மிகையாகாது. கவியரசிடமிருந்து இப் புவிமக்களின் நலம் வேண்டி ஒருபோது வெளிப்பட்டதே 'எரியும் மெழுகுவர்த்திகள் எரிகின்றன' என்ற உரைக் கோவை. சிறுகூடல் கவிஞர்தம் உரை யினுக்குச் சிறுமதுரைச் செல்வன் கவிதையுருக் கொடுத்துள்ளேன். இனிச் சுவைப்பது உங்கள் விருப்பம்.........]

என்றலைவா ! என்னிறைவா ! எளியேன் உன்னை
எத்தனையோ வியப்போடு காணு கின்றேன் !
உன்படைப்பின் திறங்கண்டு கலைஞன் என்றே
உன்னைநான் பாடுவதா, அன்றி நானே
நன்றறியும் அறிவியலின் அறிஞன் என்றே
நாமங்கள் சாற்றுவனோ ? அறிந்தே னல்லேன் !
மன்பதையில் பேரறிஞன் நடத்து கின்ற
மாசற்ற கழகத்தின் படைப்பைக் கண்டேன் !

மாகவியின் திறமையே உன்திறமை என்றே
மனங்குளிர எண்ணுபவன் நானே யன்றோ !
தாளுண்ட நீரதனில் இனிமை சேர்த்துத்
தலையாலே தருமிளநீர் போன்றே நீயும்
நான்வாழக் கருணைமழை பொழிவோ னன்றோ !
நலிந்துழன்ற பின்னாலும் இன்பம் உண்டே
நாளெல்லாம் பலபாடம் புகட்டு கின்றாய்
ஞானத்தின் பிறப்பிடமே நல்ல தேவே !

உன்படைப்பு ஒவ்வொன்றும் ஏதோ ஒன்றை
உடனுணர்த்தாக் காலத்தும் கார ணத்தை
என்போன்றூர் அறியும்வகை வைத்தோன் நீயே
எத்தனையோ தத்துவங்கள் உன்ப டைப்பில்!
நன்முகத்துக் கண்களோடு அகக்கண் சேர்த்து
நன்றேதான் காணட்டும் என்ற நோக்கோ
பகட்டுகின்ற பனங்காய்தன் மூன்று கண்கள்
படைத்தோனே என்கருத்தும் நன்றே தீதோ?

உடல்மேற்றேல் பளபளப்பு! அதனி னுள்ளே
உள்ளுணர்வைத் தூண்டுகிற நரம்பின் கூட்டம்!
கடல்போன்று பரந்திருக்கும் சதைக் கோளங்கள்
கட்டாகத் தான்நிறுத்தும் நல்லே லும்பு
படர்கின்ற பலவுணர்வை அவித்து விட்டுப்
பண்புகளைக் காட்டுகின்ற மேன்மை யுள்ளம்!
மடலன்னப் பெருநாற்றம் வீசு கின்ற
மங்காத ஞாலத்தின் மூலம் நீயே!

தோல்நீக்கிப் பழங்காட்டும் கத்தி போன்றே
தோல்வுலகாம் பழமறுத்துப் பொருளைக் காட்ட
நான்பழத்தை விட்டுவிட்டே விலங்கே காணும்
நல்லறிவே பெற்றுவிட்டேன் ஞான தேவே!
நன்றிமற வாமைஇந்த நானி லத்தில்
நன்றாக வேண்டுமென்றே நாய்ப்ப டைப்பு!
நன்றறியா வேங்கைதான் முதலா ளிக்கு
நலிகின்ற முன்னோடி என்றே வைத்தாய்!

மொழியதனின் முற்பிறப்பைக் கிளியின் மூலம்
முடுகிவரும் இசைப்பிறப்பைக் குயிலின் மூலம்
நடைபயிலும் கலைப்பிறப்பை மயிலின் மூலம்
நன்றாகக் காட்டுகின்றாய் ஞான தேவா!
கடைவிரித்தாய் எனையிந்த வைய மீதில்
காட்டிடுவாய் எனக்குவமை யாக ஒன்றை!
படைபோலப் பயணத்தைத் தொடரு கின்றேன்
பாதையதோ நீகாட்டும் வழியே யன்றோ!

நீபடைத்த உள்ளமெனும் கடலின் மேலே
ஓடிவரும் ஆசையலை வெள்ளம்! வெள்ளம்!
நீபடைத்த விஞ்ஞானி மழையி னோடு
மருகிவரும் புயல்வரவும் அறிந்து ரைப்பான்!
நீபடைத்தோன் தனக்குவரும் மரணம் என்றே
நினைத்தானா மனத்தாலே உண்மை தனை?
நீபடைத்த உள்ளமெனும் இடியாப் பத்தின்
நீட்சியிலே தலைப்பினையே காட்டு என்றாய்!

இசைத்தட்டில் மறைந்திருக்கும் இசைய தனை
ஈயன்னச் சிறுஊசி கோணர்தல் போலே
வசையில்லா வையத்தில் மறைந்த உன்னை
வாட்டமிலா தேகாட்ட உளம் நினைக்கும்!
இசைக்கின்ற வீணையொலி காதில் கேட்கும்
என்னிறைவா நீயோதான் விளிக்கே இல்லை!
இசையாத உள்ளமுடை மனிதன் தன்னை
இனிநீயும் மரணத்தால் சமன்செய் கின்றாய்!

மழையல்லாக் கோடையெனுங் காலங் தன்னில்
மண்டுகிற நிலவெடிப்புப் போலே இந்த
மாசற்ற உள்ளத்தும் எண்ணி லாதே!
மனிதன்நான் துன்புற்றும் உதைகள் பட்டும்
மயங்கிவிழும் இடமுன்றன் மடிதா னன்றோ!
மானிடனின் துயர்களினைக் காட்டு தற்கோ
மன்னவனே உனதுதிரு ஆல யத்தில்
மாசற்ற ஒளிவீசும் மெழுகு வர்த்தி!

(வேறு)

நீண்டநெடும் பயணத்தின் நினைவுகளை விளைவுகளை
நீட்டி ஒலித்துவிட்டு நீண்டு படுத்தபினும்
நின்றனது ஆலயத்து நீண்ட மெழுகுவர்த்தி
நீட்டிச் சுடர்விட்டு நிற்கிறது! நிற்கிறது!!

நீகொடுத்த காற்று நின்றுவிடை கொள்ளும்நாள்
என்றே அறிய எனக்கறிவும் இல்லையையா !
நின்காற்று ஓய நின்று கதறுகின்ற
கன்றுகளு மெத்தனையோ கணக்கில் அடங்காது !

சாகின்ற காலத்தும் சலனமற்று மெழுகுவர்த்தி
பாகாய் உருகிப் பட்டொளியை வீசிடுமே !
பாவிமடியப் படரோ ளியுந்தான் குன்ற
நின்ற மெழுகுவர்த்தி நீள எரிவதிலே !
ஆசையடுத்து அடுக்கி வைத்த பெரும்பாசம்
கூசாத பற்று குலைகாதல் நல்லிரக்கம்
மாய்கின்ற இங்நேருப்பால் மனம்போல் மெழுகுவர்த்தி
மண்டி எரிகிறது! மாய்கிறது என்னேன்பேன் !!

என்றன் நினைவுகளாம் எழில்மெழுகு வர்த்திகள்தான்
நின்றுஎரி கின்றஇடம் நின்கோவில் வாசல்கள்தான்!
எரிகின்ற வெளிச்சத்தில் ஏழைநான் இனிதுரைத்தேன்
அறிவின் பெருந்தலைவா அன்பன் உரைக்கின்றேன்,
'வாழ்ந்து முடிந்தபின்னே வருவார்கள் என்கணக்கால்
பாவியெனச் சொல்வாரோ? பரிந்துரைகள் செய்வாரோ?'
எரிகின்ற மெழுகுவர்த்தி இறைவா உனைநினைத்தே
வருகின்றேன் உன்னடிக்கு வாழவழி காட்டிடுவாய் !

வாயு நீங்க ஒரு வழி

ஓர் அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றில் பத்துப் புதுக் காசு அளவு மஞ்சள் பொடியைக் கலந்து சாப்பிட்டால் வயிற்றில் வாயு நீங்குவதோடு வயிற்று பொருமல் – அசீரணம் ஏப்பம் வயிற்று வலி முதலியவை நீங்கும்.

உயர்திரு. திவான்பகதூர் க. வெ. சித. வெ. வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள் மறைவு குறித்து நகரத்தார் ஐக்கிய சங்கம் நிறைவேற்றிய

இரங்கல் தீர்மானம்

நகரத்தார் நலம்பேண தம் ஆயுள் முழுதும் உழைத்த பெருந்தகையாளரும் அழகப்பா கல்லூரியின் நிர்வாகியாக இருந்து திறம்பட நடத்தி தமிழகத்தின் சிறந்த கல்லூரியாக விளங்கும் படியாக நிர்வாகம் செய்தவரும், அதன் பயனை எளியமுறையில் நம் சமூக மாணவமாணவிகள் உயர் கல்விபெற வாய்ப்பளித்தவரும், நம் சமூக இளைஞர் பலருக்கு வேலைவாய்ப்புக்கு ஆதரவு நல்கிய அருளாளரும், தம்மை நாடிவந்த சமூகத்தினர் பலருக்கும் இன் முகத்தோடு ஆறுதல் கூறி உதவிபுரிந்த சான்றோரும், நம் சமூக முன்னேற்றத்தில் பெரும் ஆர்வமும், எடுத்த செயல்களில் எல்லாம் வெற்றிபெற்றவர்களும், ரெம்பவும் தெய்வ பக்தியும், மதப்பற்றும், நல்ல பரந்தநோக்கமும், வள்ளல் தன்மையும், பொதுநலப்பணி களில் இடையருத ஈடுபாடு கொண்டவரும், நாட்டுக்கோட்டை நகரத்தார் அசோஷியேசன் துணைத்தலைவராக இருந்து பெரும் பணியாற்றியவர்களும், நம் நகரத்தார் ஐக்கிய சங்கம் உருவாக மூல காரணமாய் இருந்தவர்களில் முக்கியமானவர்களும், நமது ஐக்கிய சங்கத்தின் வளர்ச்சிக்காக நம் சமூக பெரியார்கள் பலரிடம் இடை யருத தொடர்புகொண்டு பொருளீட்டிச் சங்க வளர்ச்சிக்கும், நம் சமூக மாணவ மாணவியர் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டு செயலாற்றியவரும், நமது சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து பெருந்தொண்டாற்றிய பெரியாருமான நமது பெருமதிப்பிற்குரிய உயர்திரு திவான்பகதூர் க.வெ.சித.வெ.வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள் அண்மையில் இறைவனடி எய்தியதற்கும், அவர்கள் மறைவினல் ஏற்பட்டிருக்கும் இடத்தை சுலபமாக பூர்த்தி செய்யக் கூடியதாக கருதமுடியாது. அவர்கள் பிரிவிற்கு சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த இழக்க முடியாத நஷ்டத்தை தாங்கிக்கொள்வதற்கு வலிமையையும், தேவையான திடத்தையும் அன்னாரின் குடும்பத்தார்களுக்கு அருள்புரியும்படி. இச் சங்கத்தார் கடவுளை வேண்டுகிருர்கள். அன்னாரின் மறைவு நம் சமூகத்தார்களுக்கும் தேசத்திற்கும் பெரிய இழப்பாகும். நம் சமூகத் தார்களுக்கும், தேசத்திற்கும் அவர்கள் ஆற்றிய சேவைகள் என்றும் பசுமையாக இருந்துவரும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

இப்பணிக்கு ஏன் துணிந்தார்!

செயல் செம்மலாக விளங்கிய சி. வி. சிடி. அவர்களின். மறைவு குறித்து நம் இதழாசிரியர் எழுதிய இரங்கற்பாவினை வெளியிடுகின்றோம்.

அரசருக்கு அமைச்சரானார்
அனைவருக்கும் உதவியானார்
சமூக நோய்களுக்குச்
சரியான மருந்தும்ஆனார்
மருந்தாக அவர்இருந்தும்
மறைந்திட்ட மாயம்என்ன ?
திருப்பதி உண்டியல்போல்
திகழ்ந்திட்ட நல்லமகன்
மறைந்திட்டார் — நாம்
நாதமற்ற மணிபோலானோம்.
கதையாக இல்லாமல் — நல்ல
கவியாக இருந்தமகன்.
நதியோடு கலந்தநீர்போல்
நமைவிட்டுப் போய்விட்டார்
பொதுப்பணிக்கு எனக்கேட்டால்
பொருள்தருவார் சிலருண்டு — ஆனால்
பொய்க்கேட்பார் எத்தனைபேர்
பொருள்சேர்ப்பார் எத்தனைபேர்
எப்பணிக்கும் நான்என்பார்
இப்பணிக்கு ஏன்துணிந்தார் ?
வம்புக்கே வித்திடுவோர்
வாழுகின்ற உலகமதில்
கம்பனுக்கு அணிசெய்தார்
காணாமல் போனதேன்ன ?

நடப்பதையே எண்ணி
நடப்பதையே பேசி
நடவடிக்கை பலசெய்தார்
நடப்புக் கணக்கானர்
வரவேட்டைப் பெருக்கியவர்
செலவாகிப் போனரே!
வாணிபத்துச் சாதிநாம்
வளர்தொழிலில் வல்லவர்கள்
அவரவர்கள் தொழிலதிலே
வரவிருக்கும் பற்றிருக்கும்
அனேவரது கணக்கினிலும்
வரவான பெரியமகன்
அனேவருக்கும் செலவானர்
வரவாகாச் செலவன்ரே ?
வருந்துகிரேம் வாடுகிரேம்.
மறைந்தவரின் ஆத்மா
மகிழ்ச்சிபெற வழிஉண்டு
புகழ்கூறி நிற்காமல் — அவர்
பொன்செயல்கள் போற்றிடுவோம்
அவர்போலச் செயலாற்ற
அனேவரும் கூடிடுவோம்.
ஒருவராய்ச் செய்ததனே
ஒற்றுமையாய் நாம்செய்வோம்
நம்இனத்தார் உயர்வதற்கு
நல்லவழி இதுவாகும்.
கடமைக்கு விளக்கானர்
கண்ணன் அருகிருப்பார்
காலமெல்லாம் நாம்நினேப்போம்
கண்ணிரால் அஞ்சலிப்போம்.

செய்தி மலர்

நகரத்தார் ஐக்கிய சங்கம்

கல்விக்குழு கூட்டம்

நாளது பரிதாபி ஆண்டு புரட்டாசித் திங்கள் 7உ (23-9-72) நடைபெற்ற கல்விக்குழு கூட்டத்திற்கு கீழ்க்கண்டவர்கள் வந்து கலந்துகொண்டனர்.

1. உயர்திரு மு. மு. முத்தையா செட்டியார் அவர்கள்
2. ,, சுப. வயிரவன் செட்டியார் அவர்கள்
3. ,, லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்
4. ,, மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள்
5. ,, சுப. சண்முகம் செட்டியார் அவர்கள்
6. ,, ராம. அருணுசலம் செட்டியார் அவர்கள்
7. ,, குமு. முருகப்பன் அவர்கள்

சென்ற ஆண்டு உதவிபெற்று தொடர்ந்து உதவிபெற்று படித்துவருபவர்கள்

Sl. No.	Name and Address	Class		Amount
LOAN				
1.	RM. Padmanabhan, Paganeri	M.B.B.S.	3rd year	500/-
2.	RM. Murugappan, Kilasivalpatti	B. Tech	,,	500/-
3.	A. RM. Ramanathan, Nattarasan-kottai	B. Tech.	4th year	500/-
4.	AL. Subbiah, Kallupatti	B. Tech.	3rd year	500/-
5.	S. Lakshmanan, B.E. Kanadukathan	B.E.	Final year	500/-
6.	RM. Chinniah, Kothamangalam	B.E.	4th year	500/-
7.	PR. Senthilnathan, Kanadukathan	B.E.	,,	500/-
8.	KR. Nachiappan, Karungulam	B.E.	2nd year	500/-
9.	KR. Annamalai, Pallattur	B.E.	,,	500/-

10. RM. Somasundaram, Kalayarmangalam	M.Sc.,	Final year	300/-
11. S. Karuppiah, Chockanathapuram	B.Sc., Agrl.	3rd year	300/-
12. K. Dhanabalan, K. Alagapuri	B.Sc.,	Final year	300/-
13. V. Bhagavathi, Karaikudi	B.Sc.,	2nd year	300/-
14. MR. Chockalingam, Kandavarayanpatti	B.Sc ,	Finnl year	300/-
15. N. Subbiah, Nachiapuram	B.Com.,	Final year	300/-
16. SP. Vellayappan, Nattarasankottai	B.Com.,	,,	300/-
17. S. Palaniappan, Kandavarayanpatti	B.Com.,	,,	300/-
18. S. Rajakumar, Melaisivapurai	B.Com,,	,,	300/-
19. M. Palaniappan, Nerkuppai	B.Com.,	2nd year	300/-
20. SP. Ramanathan, Pallattur	B.Com.,	2nd year	300/-
21. RM. Venkatachalam, Devakottai	B.Com.,	2nd year	300/-
22. M. Tamilarasan, Melaisivapuri	B.A.,	2nd year	300/-
			8,400/-

FREE

23. RM. Kalaiselvi, Karaikudi	Pulavar	4th year	200/-
24. SM. Tharmambal, Sirukoodalpatti	Pulavar	2nd year	200/-
25. C. Ramu, Virayachilai	Teachers Training	Final year	200/-
26. KR. Andal, Alavakottai	M.Sc.,	Final year	300/-
27. M. Sivakami, Ramachandrapuram	B.Sc.,	Final year	300/-
28. N. Nachammai, A. Muthupattanam	B.Sc.,	2nd year	300/-
29. D. Mangalam, Vendanpatti	B.Sc.,	2nd year	300/-
30. KR. Mangai, Pallattur	B.A..	Final year	300/-
31. RM. Chellam, Karaikudi	B.Sc.,	Final year	250/-
32. Meenakshi, Attangudi	B.A.,	Final year	150/-
33. M. Meenal, Karaikudi	Pulavar	3rd year	100/-
Walajabad High School			
34. S. Muthu	7th Standard		150/-
35. K. Venkatachalam	8th	,,	150/-
36. SM. Thiyagarajan	6th	,,	150/-
37. SP. Somu	5th	,,	150/-
			3,200/-

1972-73ஆம் ஆண்டிற்கு கல்வி உதவிபெற்றவர்கள்

Sl. No.	Name and Address	Class		Amount
LOAN				
1.	KR. Kannappan, Sirukoodalpatti	M.B B.S.	1st year	500/-
2.	AL. Brahmavidya, Viswanathapuram	,,	,,	500/-
3.	S. Karuppiah, P. Alagapuri	M.Sc ,	1st year	300/-
4.	RM, Ganesan, Kilapoongudi	,,	,,	300/-
5.	RM. Murugappan. Kalayarmangalam	B.Sc. Agrl.	1st year	300/-
6.	S. Radhakrishnan, Konapet	,,	,,	300/-
7.	S. Pechimuthu, Devakottai	B.Sc.,	1st year	300/-
8.	K. Nagappan, Devakottai	B.Sc.,	2nd year	300/-
9.	RM. Chidambaram, Palavangudi	B.Sc ,	1st year	300/-
10.	N. Krishnan, Devakottai	B.Com ,	1st year	300/-
11.	N. Manickam, Devakottai	B.Com.,	2nd year	300/-
12.	C. Valliappan, Melasivapuri	B A.,	1st year	300/-
13.	RM. Padmanabhan, Devakottai	B.A.,	1st year	300/-
14.	S. Murugappan, Vendanpatti	B.B.A.	1st year	300/-
15.	N. Alagappan, Karaikudi	Pulavar	2nd year	200/-
16.	N. Meyyappan, Kandaramanickam	P.T.C.		200/-
				5,000/-
FREE				
17.	VR. Visalakshi, Slrukoodalpatti	B.Sc.,	2nd year	300/-
18.	K. Nachammai, Karaikudi-2	B.Ed.,		300/-
19.	K. Valliammai, Karaikudi	B.Ed.,		300/-
20.	L. Unnamalai, Devakottai	Vidwan	2nd year	200/-
21.	S, Alagammai, Nemathanpatti	Pulavar	4th year	200/-
22.	KR. Vallikannu, Sirukudalpatti	Pulavar	1st year	200/-
				1,500/-

Total amount Returnable Scholarship	...	Rs. 13,400
Total amount Free	...	Rs. 4,700
	...	Rs. 18,100

Amount sanctioned by the Board	...	Rs. 16,000	Rs. 18,000/-
,, donated by Raja Sir M. A. Muthiah Chettiar	...	Rs. 2,000	
,, distributed by the Educational Committee	...	Rs. 18,100	

மதுரை நகரத்தார் சங்க செயற்குழுக் கூட்டம்

அண்மையில் சங்கத் துணைத் தலைவரும், மகாலெட்சுமி நூற்பாலை அதிபருமான திரு. லெ. அழகு சுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் சங்கச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றன.

(1) அண்மையில் காலஞ் சென்ற கானாடுகாத்தான் திரு. C. V. CT. V. வெங்கடாசலம் செட்டியார், வேந்தன்பட்டி திரு. நா. சுப. நாகப்பச் செட்டியார் – இருவரின் மறைவு குறித்தும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

(2) கீழ்க்கண்ட 46 மாணவ மாணவியருக்குத் திரும்பப் பெறும் உதவித் தொகையாக ரூ. 9,600 வழங்குவது எனத் தீர்மானிக்கப் பெற்றது.

	பெயர்	ஊர்	படிப்பு
1.	கரு. நாச்சியப்பன்,	கருங்குளம்	B.E.
2.	S. கதிரேசன்,	வலையபட்டி	B.E.
3.	ரெ. அண்ணாமலை,	மதகுபட்டி	B.E.
4.	க. கண்ணப்பன்,	சக்கந்தி	B.E.
5.	AR. மாணிக்கம்,	தேவகோட்டை	B.E.
6.	செ. சுப்பையா,	குளிபிறை	B.B.A.
7.	கரு. முத்தையா,	சிறுகூடற்பட்டி	B.B.A.
8.	கரு. நாகப்பன்,	சொக்கநாதபுரம்	B.B.A.
9.	கி. திருஞானசம்பந்தம்,	கடியாபட்டி	B.Sc.,
10.	K. நாகப்பன்,	தேவகோட்டை	B.Sc.,
11.	N. பத்மநாபன்,	தேவகோட்டை	B.Sc.,
12.	C. இந்திரா,	நற்சாந்துபட்டி	B.Sc.,
13.	P. முத்து,	கோனாபட்டு	B.Sc.,
14.	குழ. பழனியப்பன்,	ஒக்கூர்	B.Sc.,
15.	சேவு. முருகப்பன்,	கல்லல்	B.Sc.,
16.	அரு. சத்தியமூர்த்தி,	இராமச்சந்திரபுரம்	B.Sc.,
17.	V. கமலா,	தேவகோட்டை	B.Sc.,
18.	O. ஆறுமுகம்,	கீழப்பூங்குடி	M.com.,
19.	வீர. அழகப்பன்,	தேவகோட்டை	B.com.,
20.	RM. வெங்கடாசலம்,	தேவகோட்டை	B.com.,

21.	PL. அழகப்பன்,	தேவகோட்டை	B.com.,
22.	அ. இராமநாதன்,	தேவகோட்டை	B.com.,
23.	சித. நாகசுப்பிரமணியன்,	தேவகோட்டை	B.com.,
24.	N. நாகப்பன்,	தேவகோட்டை	B.com.,
25.	T. சாத்தப்பன்,	P. அழகாபுரி	B.com.,
26.	VR. பழனியாண்டி,	தேவகோட்டை	B.com.,
27.	R. அருணசலம்,	தேவகோட்டை	B.com.,
28.	N. மாணிக்கம்,	தேவகோட்டை	B.com.,
29.	PL. இராமநாதன்,	காரைக்குடி	B.com.,
30.	SP. பழனியப்பன்,	மேலச்சிவபுரி	B.com.,
31.	மா. தமிழரசு,	கண்டவராயன்பட்டி	B.com.,
32.	வயி. இராமநாதன்,	தேவகோட்டை	B.com.,
33.	க. சொக்கலிங்கம்,	சொக்கநாதபுரம்	B.Ed.,
34.	S. நாச்சியப்பன்,	பள்ளத்தூர்	B.A.,
35.	சித. விசாலாட்சி,	புதுவயல்	B.A.,
36.	AN. வெங்கடாசலம்,	தேவகோட்டை	B.A.,
37.	AR. கண்ணன்,	வெற்றியூர்	B.A.,
38.	வெ. காசிவிஸ்வநாதன்,	தேவகோட்டை	B.A.,
39.	A. ஏகப்பன்,	குளிபிறை	B.A.
40.	சுப. சுவாமிநாதன்,	தேவகோட்டை	B.A.
41.	வீர. வீரப்பன்,	விரையாச்சிலை	பாலிடெக்னிக்
42.	N. கண்ணப்பன்,	சொக்கநாதபுரம்	பாலிடெக்னிக்
43.	RM. வீரப்பன்,	விரையாச்சிலை	பாலிடெக்னிக்
44.	AN. முத்துராமன்,	கொப்பனுபட்டி	பாலிடெக்னிக்
45.	PL. லெட்சுமணன்,	கோனுபட்டு	புலவர் வகுப்பு
46.	RM. கலைச் செல்வி,	P. அழகாபுரி	புலவர் வகுப்பு

(3) புகுமுக வகுப்பு, பள்ளிப் படிப்பில் பயிலும் 94 மாணவ மாணவிகளுக்குப் புத்தகச் செலவிற்காக ரூ. 1475/- இலவசத் தொகையாக வழங்குவதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

(4) சென்னை ஷெரீப் திரு. மு. அ. மு. இராமசாமி செட்டியார் தந்துதவும் ரூ. 600/-ஐயும் கீழக்கண்ட மூவருக்கும் இலவசத் தொகையாக வழங்குவதெனவும் தீர்மானிக்கப் பெற்றது.

1.	K. நாச்சியப்பன்,	சொக்கநாதபுரம்	B.Com.
2.	K.T.S. அழகப்பன்,	பள்ளத்தூர்	புகுமுகவகுப்பு
3.	புலவர் வே. அலமேலு,	சண்முகநாதபுரம்	தமிழாசிரியைப் பயிர்ச்சிவகுப்பு

மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்றன.

திருச்சித் 'தாய்'

(திருச்சி சுவாமிகள் குறித்து எழுதப்பெற்ற கவிதை)

காரைக்குடி மெ. குமரப்பன்

மருட்சியை நீக்கிடும் மன்னு
மக்களுக் கருளும் கண்ணு
திருச்சி சுவாமியே சரணம்
திரள் மணிச்சுடரே சரணம்.

கண்ணில் ஒளியைக் காட்டி
கண்ணீர் துடைக்கும் நல்லோன்
மண்மீ தினிலே உலவும்
மங்கா அருள்தரு வள்ளல்.

துன்பம் தோய்ந்திட்ட உள்ளம்
தூணநின் கண்பட்டால் மலரும்
இன்பந் தருகின்ற இனியோன்
இணையற்ற பெரும்நிதிச் செம்மல்.


புவியில் உலவுநற் புண்ணியன்
பூவினும் மெல்லிய சொல்லினன்
கவியில் அடக்கிடப் போமோ
கண்ணெதிர் கடவுளாம் உன்னை.

இருகரத் தினையும் நீட்டி
இணையிலாத் தெய்வத்தைப் போற்றி
தருகநற் பொருளென்று கேட்கும்
தன்மையெனக் கருள்வாய் 'தாயே'.


திருமண அரங்கம்



காரைக்குடி நா. க. மெ. சுப. வள்ளியப்ப செட்டியார்—அலமேலு ஆச்சி (சேலம் காரைக்குடி கார்ப்பரேஷன் SP. V. சுப்பையா B. E. அவர்களின் பெற்றோர்) அவர்களின் மணிவிழா 21-5-72-ம் நாள் காரைக்குடியில் மிக சிறப்புடன் நடைபெற்றது.



இராயவரம் மு. அ. மு. முத்துராமன் செட்டியார் — லெட்சுமி ஆச்சியின் மணிவிழா 9-6-72-ம் நாள் இராயவரத்தில் மிக சிறப்புடன் நடைபெற்றது.



காரைக்குடி அ. ராம. அண்ணாமலை செட்டியார்— வள்ளியம்மை ஆச்சியின் மணிவிழா 5-7-72ம் நாள் காரைக்குடியில் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.



கோனாபட்டு உ. அரு. சா. சிதம்பரம் செட்டியார் மகன் செல்வன்: கருப்பையா B.Com.க்கும் பள்ளத்தூர் ந. பெ. ந. நா. பெரிச்சியப்ப செட்டியார் மகள் செல்வி: மீனாட்சிக்கும் 12-7-72-ம் நாள் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.



காரைக்குடி கா. கா. காளையப்ப செட்டியார் மகன் செல்வன்: சாத்தப்பன் B. Sc.க்கும், ஆருவயல் அண்ணாமலை செட்டியார் மகள் செல்வி: தெய்வானைக்கும் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.



காரைக்குடி முரு. லெ. இராம நாதன் செட்டியார் மகன் செல்வன் : முருகப்பன் B.Sc., B.Ed.க்கும் கண்டனூர் மு. வீர. சு. வீர. அழகப்பச் செட்டியார் மகள் செல்வி : பரமாயி என்ற சந்திராவிற்கும் மணமகள் இல்லத்தில் 10-9-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.



தேவகோட்டை A.RM.A.L.A. A. அருணுசலம் செட்டியார் மகள் செல்வி பெத்தாளுக்கும் ஷெயூர் AV. K. M. சோமசுந்தரம் செட்டியார் மகன் செல்வன் மெய்யப்பன் (B.Com.)க்கும் 20-8-72ம் நாள் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது.



பூலாங்குறிச்சி வ. சொ. பழ. சொ. சொக்கலிங்கம் செட்டியார் மகள் செல்வி வள்ளியம்மைக்கும் வேகுப்பட்டி கும. கு. ராம. சுந்தரம் செட்டியார் மகன் செல்வன் ராமையா B. Sc.க்கும் 20-8-72ம் நாள் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது.

வலையபட்டி கேஎம். எஸ். எஸ். சிவலிங்கம் செட்டியார் மகள் செல்வி : விசாலாட்சி என்ற சுசீலாவிற்கும் மேலைச்சிவபுரி எம். பிஎல். எம். பழநியப்ப செட்டியார் மகன் செல்வன்: முத்தையா (B.E.)க்கும் மணமகள் இல்லத்தில் 1-6-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

காரைக்குடி சுப.மு.நா. வீரப்ப செட்டியார் மகன் செல்வன் : சுப்பிரமணியன் (B.Sc., M.A.)க்கும் விசுவநாதபுரம் பி.கு.நா.கும. வயிரவன் செட்டியார் மகள் செல்வி : தெய்வானை என்ற சீதா (B.A.)க்கும் மணமகள் இல்லத்தில் 26-6-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

நெற்குப்பை சா. பழ. மு. சா. பனையப்ப செட்டியார் மகள் செல்வி: தனம் என்ற முத்தாத்தாளுக்கும் மேற்படியூர் முத்து கு. மு. சுப. தியாகராசன் செட்டியார் அவர்கள் மகன் செல்வன் : சுப்பிரமணியன் (B.E)க்கும் மணமகள் இல்லத்தில் 30-6-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

கண்டனூர் தெ.ராம.லெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் மகன் செல்வன் : இராமநாதனுக்கும் நாச்சியார்புரம் சே.சு.சே. சேக்கப்ப செட்டியார் மகள் செல்வி: வள்ளியம்மைக்கும் மணமகள் இல்லத்தில் 20-8-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

காரைக்குடி சு. ராம. தெ. முருகப்ப செட்டியார் மகள் செல்வி : விசாலாட்சிக்கும் மேற்படி நகர் அ. உ. மெ. ராம. மெய்யப்ப செட்டியார் மகன் செல்வன்: இராமசாமி என்ற கண்ணனுக்கும் மணமகள் இல்லத்தில் 23-8-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

பாகனேரி அரு.சு.நா. நாச்சியப்ப செட்டியார் மகன் செல்வன்: அரவிந்த் என்ற கண்ணப்பன் (M.B.B.S.)க்கும் கல்லல் அரு. சு. நா. சுப்பிரமணியன் செட்டியார் மகள் செல்வி: நாச்சம்மை என்ற புஷ்பா (B. A.)க்கும் மணமகள் இல்லத்தில் 24-8-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

பள்ளத்தூர் பிஎல். இராமசாமி B. Sc, (நிருவாகி, இந்தியன் வங்கி, உடுமலைப்பேட்டை) மகன் செல்வன்: பழநியப்பனுக்கும் மேற்படியூர் எம்ஆர். கே. ஏஎல். ஆர்எம். அழகப்ப செட்டியார் மகள் செல்வி : சீதாவுக்கும் மணமகள் இல்லத்தில் 27-8-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

மேலைச்சிவபுரி வ.சுப. திருப்பதி செட்டியார் மகன் செல்வன் : சுப்பையா B.Sc.க்கும், வேந்தன்பட்டி அரு. அ. சுப. அண்ணாமலை செட்டியார் மகள் செல்வி : விசாலாட்சிக்கும் மணமகள் இல்லத்தில் 11-9-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

காரைக்குடி லெ.ராம.லெ.ராம. லெ. ராமசாமி செட்டியார் மகன் செல்வன் : லெட்சுமணனுக்கும், கல்லல் அரு.சு.நா. அருணாசலம் செட்டியார் மகள் செல்வி : மீனாட்சிக்கும் மணமகள் இல்லத்தில் 14-9-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

பூலாங்குறிச்சி வ. சொ. வள்ளியப்ப செட்டியார் மகன் செல்வன் சொக்கலிங்கத்திற்கும், வேந்தன்பட்டி நகு.அரு.குப. அருணாசலம் செட்டியார் மகள் செல்வி மீனாட்சிக்கும் 28-8-72ம் நாள் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது.



கோலாலம்பூர் தமிழ்நேசன் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் A.M.N. அவர்களின் மகன் சொக்கலிங்கம் என்ற செல்வம், பி.ஏ. ஆனர்சுக்கும், நாட்டரசன்கோட்டை திரு. பெரி. சுப. ராமனுதன் செட்டியார் அவர்களின் மகள் கண்ணம்மை என்ற சந்திரா, பி.காம்.க்கும் 10-9-72 ஞாயிற்றுக் கிழமையன்று நாட்டரசன் கோட்டையில் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் அவர்களும் தமிழ் முறைப்படி திருமணச் சடங்குகளை நடத்திவைத்தனர். மணமகன் சிங்கப்பூர் வானெலியின் செய்திப் பகுதியில் பணிபுரிகிருர். மலேஷியா தொழிலாளர் நல அமைச்சர் டான்ஸ்ரீ. மாணிக்கவாசகம் அவர்களும், மற்றும் ஏராளமான பிரமுகர்களும் மலேஷியாவிலிருந்தும், தமிழகத்திலிருந்தும் மணமக்களுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

காரைக்குடி பெரி. இலட்சுமணன் செட்டியார் மகன் செல்வன்: எல். பெரியணன் என்ற எம். அருணுசலம் (M.Sc.)க்கும் (அழகப்பா கல்லூரி கணிதத் துறைத் துணைப் பேராசிரியர்) மேற்படியூர் சிடி. ஆர்எம். என். நாராயணன் செட்டியார் மகள் செல்வி: சிவகாமிக்கும் மணமகள் இல்லத்தில் 26-6-72-ஆம் நாள் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

பெருமைக்கு உரிய திருமணம்

குடும்பம் ஒன்றை உருவாக்குபவர்களை விளக்கேற்றி வைத்தவர்கள் என்று சொல்லுவார்கள். அந்த நல்ல காரியத்தை திருச்சி நகரத்தார் சங்கத்தார் செய்திருக்கிறார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் பொறுப்பிலேயே திருச்சி நகரத்தார் சங்கத்தார் நடத்திய திருமணம் பற்றிய செய்தியினைத் தந்துள்ளார்கள். அதனைக் கீழே தருகின்றோம்:—



மணமக்களோடு – பொருளாளர் S. சுந்தரம், தலைவர் ST. AR அருணாசலம் செட்டியார், செயலாளர் PL. ராமசாமி, மணமகன் இராமனாதன், செயலாளர் RM. நாராயணன், மணமகள் தெய்வானை, துணைத் தலைவர் S. AR. பழனியப்பன், கண்டனூர் திரு. சுப்பையா செட்டியார் ஆகியோர் காட்சி தருகின்றனர்.

திருமண நிகழ்ச்சி விபரம்

அயல் நாடு சென்று கொண்டுவந்த செல்வத்தைக் கொட்டி அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டி வாழ்ந்த நம் சமுதாயத்தின் இடையே தற்காலத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியால், ஊர்தோறும் தோன்றிய நம் சங்கங்கள் பல பல. தோன்றிய சங்கங்களில் தொன்மையானதும் எதிலும் முதன்மையாக நிற்கும் திருச்சி நகரத்தார் சங்கம், நம் சமுதாயத்தில் முறைதவையால் திருமணம் நடைபெறுமல் இன்னலுறும் கன்னிப் பெண்களின் இன்னல்களைப் போக்கத் திருமணத் திட்டமொன்று வகுத்து அத் திட்டத்தின்கீழ்:

பரிதாபி ஆண்டு ஆவணித் திங்கள் 29-ம் நாள் கண்டனூர் தெ. ராம. லெ. ராம. பழனியப்ப செட்டியார் அவர்களின் திருவளர் செல்வி தெய்வானையை நம் சமுதாயத்தின் அன்புள்ளம் கொண்ட திருச்சி நகர்வாழ் நகரத்தார் பெருமக்கள் உதவியுடன் அரிமழம் ராம. சாமிநாதன் செட்டியார் அவர்கள் புதல்வன் திருவளர் செல்வன் இராமநாதனுக்குத் திருமணம் எங்கள் சங்கத்தின் ஆதரவில், திருச்சியில் ஒத்தமால் தெருவில் இருக்கும் நகரத்தார் சங்க நகர விடுதியில் இனிது நிறைவேறியது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமணமும் நம் சமுதாய முறைப்படி மாப்பிள்ளை அழைத்து, கோவில் மாலை கொண்டுவந்து, வேவு இறக்கி, மணை போட்டு, அரசாணிக்கால் கட்டி, முளைப்பாரி வைத்து, காப்புக் கட்டி, கால் மோதிரம் இட்டு, குலம் வாழும் பிள்ளை எடுத்து, பிள்ளை எடுக்கி, பெண் அழைத்து சகல சடங்குகளுடன் இனிது நிறைவேறியது என்பது குறிப்பிடத் தக்கது.


இத் திருமணம் இனிது நிறைவேற சங்கத்தின் தலைவர் திரு. சித. அரு. அரு. அவர்களும், துணைத் தலைவர் S. AR. பழ. அவர்களும், செயலாளர்கள் RM. நாராயணன் அவர்களும், PL. ராமசாமி அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சி சொல்லில் அடங்கா. சடங்கு முறைகள் செம்மையாக நடைபெற தலைவரின் துணைவியாரும் செயலாளரின் துணைவியாரும் எடுத்துக்கொண்ட முயற்சி போற்றத் தக்கது. இத் திருமணம் இனிது நிறைவேற இந் நகர்வாழ் நகரத்தார் பெருமக்கள் எடுத்துக்கொண்ட முயற்சி போற்றத்தக்கது. இத் திருமணம் இனிது நிறைவேற இந் நகர்வாழ் நகரத்தார் பெருமக்கள் எடுத்துக்கொண்ட முயற்சி குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணம்போல் பாவித்து இனிது நிறைவேற்றி வைத்தது பெருமைக்குரியதே.

இம்மாதிரித் திருமணம் நடைபெறுவதைக் கேட்ட நம் சமுதாயச் சான்றோரும் பெரியோரும் வாழ்த்தி செய்திகள் அனுப்பினர். செட்டி நாட்டரசர் டாக்டர் ராஜா. சர். முத்தையா செட்டியாரவர்கள், திரு. மு. அ. சிதம்பரம் செட்டியாரவர்கள், திரு. அ. மு. மு. அருணு சலம் செட்டியாரவர்கள், திரு. கருமுத்து. தியாகராசன் செட்டியார் அவர்கள், திரு. லெ. நாராயணன் செட்டியாரவர்கள், திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியாரவர்கள், திரு. ஆ. நாகப்ப செட்டியார் அவர்கள், திரு. T. சுந்தரம் செட்டியாரவர்கள், திரு. T. மாணிக்க வாசகம் செட்டியாரவர்கள், திரு. லெ. கிருஷ்ணன் அவர்கள் எல்லோரும் மணமக்களை வாழ்த்தி சங்கத்தின் சேவையைப் போற்றி, செய்திகள் அனுப்பி உள்ளார்கள்.

திரு. தமிழ்வாணன் அவர்கள் "தங்கள் வீட்டுத் திருமண விழா வில் அன்பு மணம் கமழட்டும். அறிவு மணம் வீசட்டும். அருள் மணம் பரவட்டும்" என வாழ்த்தியுள்ளார்கள்.

திரு. சா. கணேசன் அவர்கள், "இந்த நல்ல இன்றியமையாத பணியை எண்ணி எண்ணி மனம் களிக்கின்றேன். சங்கத்தை நெஞ்சார வாழ்த்துகின்றேன்" என வாழ்த்தியுள்ளார்கள். ராயவரம் திரு. ராம. சீனிவாசன் அவர்கள் "உங்களையும் உங்கள் சங்கத் தினரையும் எப்படிப் போற்றுவது என்று தெரியவில்லை. நீங்கள் செய்யும் நல்ல காரியத்திற்கு சமூகம் ரொம்பக் கடமைப்பட்டு இருக் கிறது. ஒரு குடும்பத்தை உண்டாக்கிய பெருமை உங்கள் எல்லோருக்கும் உண்டு. வீணுய்ப் பேசிக் காலத்தைக் கழிக்காமல் காரியத்தில் புகுந்த உங்கள் எல்லோருக்கும் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று வாழ்த்தியுள்ளார்கள்.

பெண்கள் சாப்பிடும்போது சங்க உறுப்பினர்களின் இல்லத்தரசி களும், ஆண்கள் சாப்பிடும்போது சங்க உறுப்பினர்களும் பரிமாறியது வரவேற்கத் தகுந்ததாக இருந்தது.



இராமசாமி மாணவியர் இல்லத் திறப்பு விழா
சி. ராம. இராமசாமிச் செட்டியார் படத் திறப்பும்

பரிதாபி ஆண்டு ஆவணித் திங்கள் 26-ஆம் நாள் (11-9-72) காலை ஒன்பதேகால் மணியளவில் விநாயகர் வழிபாட்டோடு விழாத் தொடங்கியது.

மகளிர் விடுதியை காரைக்குடி திரு. மெ. செ. மெய்யப்பன், B.E., அவர்கள் விளக்கேற்றித் திறந்து வைத்தார்கள். பால் காய்ச்சி வழங்கப்பட்டது. பிறகு விழா துவங்கியது.

கல்லூரி மாணவியர் கடவுள் வாழ்த்துடன் துவக்கம் பெற்றது திறப்பு விழா. கல்லூரித் தாளாளர் திரு. வ.பழ.சா.பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் வந்திருந்தோரை வரவேற்றார்கள். வரவேற்புரையில் திரு. சி. ராம அவர்கள் தம் வாழ்நாளில் சபைக்குச் செய்த உதவிகளைக் கூறி அவர்கள் வாக்களித்த தொகைக்கு மேல் மாணவியர் இல்லம் கட்டுதற்கு அவர்தம் மைந்தர் பண உதவி அளித்து, சபைக்கு இதுவரை மாணவியர் இல்லம் இல்லாதிருந்துவந்த ஒரு குறையை நீக்க உதவி அதனைச் செவ்வண் கட்டிமுடிக்க உதவிய தன்மையைக் கூறி வரவேற்றார்கள்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தம் தலைமை உரையில் திருக்குறளைப் பின்பற்றாது இருக்கும் தற்போதைய தமிழக நிலையை எடுத்துக் கூறி உளவியல் படிப்பவர்க்கும், பொருளியல் படிப்பவர்க்கும், அரசியல் படிப்பவர்க்கும், தத்துவம் படிப்பவர்க்கும் திருக்குறள் பாடமாக வைக்கப்படாத நிலையைக் கூறி, அவர்களுக்குத் திருக்குறளைப் பாடமாக வைக்க வேண்டும் என்று கூறினார்கள். சபையின் துவக்க காலத்தில் நடைபெற்ற சொற்பொழிவுகளுக்குத் தாமும் ஒரு பார்வையாளராக வந்திருந்து சொற்பொழிவுகளைக் கேட்டுச்

சென்ற பழமைத் தொடர்பைக் கூறி தற்போது அவ்விடத்திலேயே தலைமை தாங்க வந்திருப்பதனையும் பெருமையுடன் கூறினார்கள். மலேயாவில் சைவ சித்தாந்தத்தைப் பரப்ப உதவியர்கள் இராமசாமிச் செட்டியார் அவர்கள். ஈந்துவக்கும் இன்பம் பெற்றவர்கள் என்ற வழியில் இராமசாமிச் செட்டியார் இருந்தார்கள். அவர்களுக்குப் பின் என் நோற்றான் கொல் என்னும் சொல் என் பதன்படி அவர்தம் மைந்தர் நாகப்பன் அவர்களும் கொடைச் செயல்களைச் செய்து சிறப்படைகிறார்கள். அவர்களுடைய கொடைத்திறத்தால் உருவான இராமசாமி மாணவியர் இல்லத்தை அவர்களுடன் தொடர்புடைய நல்லபண்பாளரான திரு. மெ. செ. மெய்யப்பன் அவர்களைக் கொண்டு திறக்கச் செய்ததும் செட்டியார் அவர்களுடைய உருவப் படத்தைத் திறந்து வைக்கச் செய்ததும் பொருத்தமுடையது தான். எந்தப் புண்ணியவான் பெற்ற பிள்ளையோ என்று பொது வழக்கில் பாராட்டுகின்ற ஒன்று தான் திருவள்ளுவரால் 'என் நோற்றான் கொல்' என்று குறிப்பிடப்படுகிறது. இம் மாணவியர் இல்லத்தில் தங்கிப் பயன்பெற்றுச் செல்லும் மாணவியர் தம் நினைவில் எப்போதும் தங்கிவரக்கூடியது' இராமசாமிச் செட்டியார் அவர்கள்தம் புகழ்ப் பெயர். இத்தகைய பெருமையைத் தந்தைக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார் அவருடைய மகனார். இத்தகைய மைந்தர் பிறப்பில் தந்தைக்குப் புகழ் ஏற்படுகின்றது என்று கூறி மெ. செ. மெய்யப்பன், B.E., அவர்களைச் சி. ராம. இராமசாமிச் செட்டியாரின் உருவப்படத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்படி அழைத்தார்கள்.

செட்டியார் அவர்களுடைய உருவப் படத்தைத் திறந்து வைத்து திரு. மெ. செ. மெய்யப்பன் அவர்கள் உரையாற்றினார்கள். இக் கல்லூரி பழமை மிக்கது. இதனின்றும் படித்துப் பரந்திருப்பவர்கள் பலர். திரு. கதி. சுந்தரம் இங்கு படித்துவந்தவர்கள்தான். அவர்கள் எனக்கு மேடையிலே பேசுதற்குக் கற்றுத் தந்தவர்கள். திரு. மெ. சுந்தரம் இங்கு பயின்று வெளிவந்தவர்கள் தான். அவர்கள் எனக்குத் தமிழ் பயிற்றுவித்தார்கள். இக் கல்லூரியிற் பயின்று வெளிவந்தவர்கள் தமிழகம் முழுவதும் பரவியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மேலும், மலேயாவில் சி. ராம. அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் பழகுதற்கு இனிமையானவர்கள். மலேயாவிலே சைவ சித்தாந்தத்தைப் பரப்ப முனைந்து உதவியவர்கள். தவத்திரு அடிகளார் அவர்கள் மலேயா வந்திருந்த போது அடிகளார் அவர்களால் சித்தாந்த மணிமொழிச் செல்வர் என்ற பட்டம் வழங்கப் பெற்ற பெருமை கொண்டவர்கள். மலேயாவிலே சீனர், மலேயர், இந்தியர், தமிழர் என்ற பல்வேறு இனத்தவர்களுடன் பழகி, அவர்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அவர்களிடம் அன்புடன் பழகிய நெருக்கத்தால் எனக்கு ஈடுபாடு அதிகம் உண்டு அண்ணா காரைக்குடி வந்திருந்த போது சென்னையிலும், காஞ்சியிலும் பச்சையப்பர், அண்ணாமலையில் அண்ணாமலை அரசர், மதுரையில் தியாகராசர், காரைக்குடியில் அழகப்பர் அறக்கொடையிற் சிறந்திருப்பதாகப் பாராட்டிக் கூறினார்கள். நாவில் மூவர் நகரத்தார்கள். இதுபோல இக் கல்லூரித் தாளாளர்களும் சிறந்திருக்கிறார்கள். கொடுக்கின்ற கொடைகளிலே சிறந்தது அறக் கொடை. அறக் கொடையிலும் அறிவுக் கொடையே, கல்விக் கொடையே சிறப்புடையதாகும். அக் கொடையைச் செய்து புகழடைந்தார்கள் சி. ராம. அவர்கள். தந்தைவழி அப்புகழை மேலும் செய்து புகழடைகிறார் நாகப்பன் அவர்கள். சைவசித்தாந்த வகுப்பு நடத்த வேண்டும்

என்ற விருப்பம் கொண்டிருந்தார்கள் சி. ராம. அவர்கள். அவர்கட்குப் பின் அவர்கள் நினைவாக மதுரையிலே சைவ சித்தாந்த வகுப்பினை ஆண்டுக்கு ஆண்டு ஏற்பாடு செய்து நடத்திவர நாகப்பன் அறக்கட்டளை நிறுவியுள்ளார்கள். மேலைச்சிவபுரியில் மாணவியர் தங்க வசதியின்றி இருப்பதனை அறிந்து மாணவியர் விடுதி கட்ட வேண்டுமென்று விரும்பி வாக்களித்தவர்கள் சி. ராம. அவர்கட்குப் பின் வாக்களித்ததற்கும் மேல் கொடுத்து தந்தையின் விருப்பங்களை நிறைவேற்றியுள்ளார் நாகப்பன். ''அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டுதல்'' என்று புலவர் குறிப்பிட்டுள்ளபடி கல்விக் கொடையிலும் தங்கியிருந்து படிப்பதற்கு உறைவிடம் கட்டிவிடும் அறக்கொடை மிகச் சிறந்ததாகும். அதனை இங்கு நிறைவேற்றிப் புகழடைகிறார்கள் சி.ராம. குடும்பத்தார். இத்திறப்பு விழாவிற்குத் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமை தாங்கியது பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போல அமைந்துள்ளது என்று திறப்பு விழா உரை நிகழ்த்தினார்கள்.

அடுத்துப் பாராட்டுரை வழங்கிய டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் சி.ராம அவர்களுடைய சபைத் தொடர்பு, குடும்பத் தொடர்பு பற்றிக் குறிப்பிட்டார்கள். கொடை பிறவிக் குணம். அக் குணமுடையவர்கள் சிறந்தவர்கள். கொடுத்துப் பழகுகின்ற பழக்கம் சிறப்புடையது. முதற் கொடை அளிப்பவர்கள் அடுத்தடுத்துக் கேட்காமலேயே தாமே முன்வந்து கொடுப்பார்கள் என்று அடிகளார் தலைமை உரையில் குறிப்பிட்டதனை வலியுறுத்தி மேலும் பேசுகையில் சிறிது கொடுத்தாலும் கொடைதான். கொடுப்பதில் கொடுக்கின்ற மனம்தான் பெரிதே தவிர, கொடை அளவில் சிறிது பெரிது என்று அளவு கிடையாது. பத்து ஆண்டுகளுக்கு முன் சபையை மூட வேண்டிய நெருக்கடி ஏற்பட்ட போது சபைத் தலைவராக இருந்த பழ. சா. அவர்கள் கல்லூரியை மேலும் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று முயற்சி செய்தார்கள். அம் முயற்சியினால் நன்கொடை பெற மலேயா சென்று வந்த வரலாற்றைக் கூறினார்கள். மலேயாவில் நன்கொடை பெற்றுத் தர மிகவும் உதவியவர்கள் சி. ராம. அவர்கள். சபைக்கு இடுக்கண் வந்தபோதெல்லாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உதவி செய்தவர்கள் சி. ராம. படிக்கும் மாணவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டிவிட ஒவ்வொரு ஆண்டும் மாணவர்க்குப் பரிசுகளும் பதக்கமும் அளிக்க முன்வந்து ஏற்பாடு செய்தவர்கள். மாணவியர் இல்லத்திற்காக தொகை அளிக்க உறுதிதந்தனர். அவ்வுறுதியை நிறைவேற்றி நாகப்பர், சி. ராம. குறிப்பிட்ட தொகைக்கு மேலும் அதிகமாகக் கொடுத்து விடுதியைக் கட்டி முடிக்க உதவியுள்ளார்கள்.

பெரும்பாலும் திறப்பு விழாவிற்கு வயதானவர்களை அழைப்பதுதான் வழக்கம். ஆனால், திரு. மெய்யப்பன் அவர்கள் சி ராம. அவர்களுடன் பழகிய பழக்கத்தாலும் பற்றாலும், நாகப்பரின் மேற்கொண்ட அன்பாலும் அவர்கள் கூறியவுடன் வந்து திறந்து வைத்துப் பெருமை அளித்தார்கள். தவத்திரு. அடிகளார் அவர்களும் வந்திருந்து தலைமை தாங்கிச் சிறப்பித்ததனையும் பாராட்டினார்கள். நன்கொடைகள் மூலமாக நடைபெறும் கல்லூரியிற் படிக்கும் மாணவர்கள் குறிக்கோளுடன் தம் படிப்புக் காலங்களில் பொறுப்புடன் பயின்றுவந்து நன்கொடையாளர்க்குப் பெருமையளிக்க வேண்டும் என்று கூறிப் பாராட்டினார்கள்.

சபையின் துணைத் தாளாளர் திரு. ப. சா. பழனியப்பன் அவர்கள் நன்றி கூறினார்கள். நாட்டு வாழ்த்துடன் திறப்பு விழா இனிது முடிவடைந்தது.

கருத்து மலர்கள்

கவியரசு கண்ணதாசன்

அரைகுறையாக முடிக்கப்பட்ட கட்டிடம் ;
ஒரு புதிய குட்டிச்சுவர்.
செம்மையாகச் செதுக்கப்பட்ட கல் ;
ஒரு புதிய சிற்பம்.
அரைகுறையாக வேளாண்மை செய்யப்பட்ட நிலம் ;
களை மண்டிய காடு.
செம்மையாகப் பண்படுத்தப்பட்ட நிலம் ;
செழுமையான தோட்டம்.
முழுமை பெற்ற பழமைக்கும் பெருமை ;
முழுமையில்லாத புதுமை, சிறுமை.
நான் யார் ?
நானோர் அரைகுறைக் கட்டடம் ;
முறையாகப் பண்படுத்தப்படாத நிலம் ;
பாதி வெந்த சோறு ;
மண் கலந்த தங்கம்.

முழுமையில்லாத இந்த மனிதனுக்குத் தினந்தோறும் மாறுபட்ட உணர்ச்சிகள் அதிகம்.

'இந்த உலகமே நம் கையில்' என்பது போல் இவனது ஒருநாள் பொழுது விடிகிறது.

'இன்று என்ன செய்யப் போகிறோமோ ?' என்ற கோழைத் தனத்தோடு மறுநாள் பொழுது விடிகிறது.

ஒருநாள் நம்பக் கூடாதவனை நம்பிக் கெடுகிறது ;
மறுநாள் நம்பிக்கைக்கு உரியவனைப் பிரிந்து தவிக்கிறது.

படத்திலே கதாநாயகி அழுதால் இவனது கண்களில் கண்ணீர் வருகிறது !

இது கதைதானே என்று நினைக்கிறான் ;
ஆயினும், உணர்ச்சி நரம்பு கொதித்து உருகுகிறது.

இந்த மனோவியாதிக்காரனுக்கு, இறைவா, நீ சில வரங்களை அருள வேண்டும்.

இனி, பகைவர்கள் வேண்டாம் ; நண்பர்களைக் கொடு.
முட்கள் வேண்டாம் ; மலர்களைக் கொடு.
மூடர்களை நெருங்கவிடாமல் அறிஞர்களை நெருங்கச் செய்.
இவனது ஆடைகளே இவனைப் பகைக்காமல் காப்பாற்று.

பரந்த வானத்தில் இவனொரு வெண்ணிலவாக இல்லாவிட்டாலும், நட்சத்திரமாகவாவது மின்னவிடு.

இது நஞ்சு, இது அமுது எனப் பேதம் காட்டு.
இவனது வாக்கியங்களில் நீ வார்த்தையாக வந்து நில்.
இவனது கண்களுக்கு நீயே ஒளியாய் இரு.

எப்போதாவது அந்தக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தால், அதைத் துடைக்கின்ற கையாகவும் நீயே இரு.

ஊமை உள்ளத்தின் உணர்ச்சிக் காட்டாறு கட்டுப்படுத்தப்பட வேண்டிய நேரத்தில் அணைக்கட்டாக நின்று காப்பாற்று.

சினந் தணிந்த மனிதனாக,

இனந் தெரிந்த மனிதனாக,

மனந் தெளிந்த ஞானியாக—இவனை மாற்று.

பிறப்புக்குப் பொறுப்பானதுபோல், நடப்புக்கும் பொறுப்பேற்றுக் கொள்.

பாதி முடிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தில், அதாவது புதிய குட்டிச் சுவரில், எத்தனையோ கழுதைகள் குடியிருந்திருக்கின்றன.

காலந் தாழ்ந்துதான் அவை கழுதைகள் என்று அறிந்துகொள்ள முடிந்ததென்றால், இவனது ஏழை அறிவை இதற்குமேல் எப்படி உரைப்பேன்!

ஆமைக்குக் கனமான ஓடு கொடுத்த உன் கருணையான உள்ளம்,

இந்த ஏழைக்கு ஏன் இவ்வளவு மென்மையான உள்ளத்தைக் கொடுத்தது!

மூல முதல்வனே!

மூலம் புரிந்துவிட்டால் உரை எதற்கு?

உண்மை தெரிந்துவிட்டால் பிரார்த்தனை எதற்கு?

விளக்கம் தெளிவாக இருந்தால் விவாதங்கள் எதற்கு?

நீ எனக்குச் சரியான வழி காட்டினால் இந்த வேதனையும், வேண்டுகோளும் எதற்கு?

காலிலே குத்திய பின்பு 'இது முள்'ளென்று நெஞ்சு சொல்லுகிறதே, அது குத்துவதற்கு முன்பு கண் சொல்லிவிடக் கூடாதா?

அனுபவ விளைவுகளை அறிவின் விளைவாக ஆக்கித்தரக் கூடாதா?

நான் நடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கிறேன்.

என் வாழ்க்கையின் ஒவ்வொரு ஆண்டிலும், என் குதிரை ஊருக்குப் 'பக்கத்தில்' வரும்போது, நானே காட்டுக்குள் துரத்தியிருக்கிறேன்.

பல நேரங்களில் தவறான முடிவுகளைச் சந்தோஷமாக மேற்கொண்டு, அனுபவ விளைவாகத் தண்டனைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

கடலிலிருந்து நீரை வாங்கிய மேகம், ஏதோ ஒரு பூமியிலே அதைத் துளிகளாகச் சிந்துகிறது.

அந்தத் துளிகள் ஒன்றுகூடி ஏதோ ஒரு குளத்திலே சங்கமிருக்கின்றன.

அவை புறப்பட்ட இடமெங்கே, புகுந்த இடமெங்கே?

நீ மட்டுமே முன்கூட்டி அறியக்கூடிய ரகசியம் இது.

என் நிலையும் அதுதான்.

புறப்படுவது மட்டும்தான் எனக்குத் தெரிகிறது.

புகுந்த பிற்பாடுதான் 'எங்கிருக்கிறோம்' என்பது புரிகிறது.

நாற்பத்தி மூன்று வசந்தங்களையும், கோடைகளையும் பார்த்த பிறகும் கூட;

வாழ்க்கையில், எது வசந்தம், எது கோடை என்று புரியவில்லை.

ஒரே ஒரு அறிவை மட்டும் தெளிவாகக் கொடுத்துவிட்டு, பாக்கி அத்தனையையும் என்னிடமிருந்து பறித்துக்கொண்டு, இந்த பூமிக்கு என்னை அனுப்பி வைத்த பரம்பொருளே!

உன் கட்டளைப்படி ஒரு தாயும் தந்தையும் செய்த முட்டாள் தனத்தில் பிறந்த ஒரு ஜீவராசி, தான் நீரில் வாழும் இனமா, நிலத்தில் வாழும் இனமா என்று தெரியாமல் தவிக்கிறது.

இது என்ன குற்றம் செய்தாலும் அது நீ செய்த குற்றமே!

இது இனிச் செய்யப்போகும் குற்றங்களையும், உன் கணக்கிலேயே வரவு வைத்துக்கொள்.

ஒரு பையனைத் தந்தை கேட்டார்:

"தம்பி! மீன்கள் நீரிலே வாழ்வது உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?"

பையன் சொன்னான்:

"அது ஆச்சரியமில்லை அப்பா! தான் வாழ்ந்த நீரிலேயே அது கொதித்துக் குழம்பாகிறதே, அதுதான் ஆச்சரியம்!"

இறைவா! மனிதனுக்கு நீ எண்ணங்களை வைத்ததில் ஆச்சரியமில்லை; அந்த எண்ணங்களிலேயே அவன் வெந்து வெந்து அழிகின்றானே, அதுதான் ஆச்சரியம்.

எண்ணங்களே காரியங்களாகின்றன.

காரியங்களே அனுபவங்களைச் சேகரிக்கின்றன.

நிகழ்ச்சிகளுக்குப் பின்னாலும் நினைவுகள்.

விளைவுகளுக்குப் பின்னாலும் விளக்கங்கள்.

நீயே ராமாவதாரத்தில், பொய் மான் எது உண்மை மான் எது என்று தெரியாமல் சீதையைப் பறிகொடுத்தாய்.

கற்பின் செல்வி அகலிகை—உண்மைக் கணவன், போலிக் கணவன் என்ற பேதம் தெரியாமல் கற்பைப் பறி கொடுத்தாள்.

சூதாடிய பின் புத்தி பெற்ற தருமன்,

சூதாட்டத்திலேயே உதவிக்கு வராமல் காரியங்களை முற்றவிட்டு, பாண்டவர்களைக் காடு போகவைத்து, பாஞ்சாலியைத் துகிலிழக்க விட்டு, போர்க்களத்தில் வெற்றி தேடித்தந்த உன் கிருஷ்ணவதாரம்,

சீதையைச் சிறையெடுத்த பின்னரே முறையறிந்த ராவணன்,

தாசி வீடு சென்று அடிக்களித்த பின்பே தன் புத்திக்கு மீண்ட கோவலன்,

உறவினரால் துன்பப்படுத்தப்பட்டு, காலங் கடந்தபின் ஞானப் புலம்பல் புலம்பிய பட்டினத்தார்,

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, நோய் நாடி அறிவு பெற்ற அருணகிரிநாதர்,

மனைவியின் தீய ஒழுக்கத்தால் ஞானியான ராஜா பர்த்ருஹரி,

—அனுபவம் எத்தனை பேருடைய படங்களைத் தன் மாளிகையில் மாட்டி வைத்திருக்கிறது.

அனுபவங்களைக் கொள்முதல் செய்வதில் அவதாரங்களே தப்ப வில்லை என்றால், மனிதர்கள் எம்மாத்திரம்!

உபநிஷக் கதைகளெல்லாம் அனுபவத்தின் மகிமையைக் கூறும் ஓவியங்களல்லவா!

எண்ணங்கள் எப்பொழுதுமே சீரான வழியில் சென்றால், அனுப வங்கள் இல்லை.

அனுபவங்கள் இல்லையென்றால் மனிதன் வெறும் ஜடம்.

ஆகவேதான் எண்ணங்களில் வெந்து வெந்து அவன் அனுபவங் களைப் பெற வேண்டுமென்பது உன் ஆணைபோலும்!

மலைகளுக்கும், மரங்களுக்கும் வயது உண்டு; அனுபவமில்லை.

மனிதர்களுக்கு மட்டுமே அனுபவமுண்டு.

முன்னால் போகும் ஆட்டுக்குட்டியின் அனுபவம், பின்னால் வரும் ஆடுகளுக்குப் பாடம்.

முன்னாள் மந்திரிகளின் அனுபவம், பின்னால்வரும் மந்திரிகளுக்கு எச்சரிக்கை.

பிறரது அனுபவங்களிலிருந்து பாடம் பெற்ற பிறகாவது சுய தரிசனம் பூர்த்தியாகிவிடுகிறதா?

இல்லை!

சுயமாகவும் கொள்முதல் செய்தாக வேண்டும்.

முனிவனுக்குத் தன் மனைவி அகலிகைமீது ஏற்பட்டிருந்த சந்தே கத்தைத் தீர்த்துவைத்த ராமன், உத்திர காண்டத்தில் தன் மனைவி யின்மீதே சந்தேகப்படவில்லையா?

கோபியர்களின் சேலைகளை மறைத்துவைத்து விளையாடிய கோபாலன், அதே சேலையைப் பாஞ்சாலி இழந்தபோது பதற வில்லையா?

சுயதரிசனம் என்பது அவதாரங்களுக்கும் தேவைப்பட்டது.

அனுபவங்களைக் கொள்முதல் செய்ததன் மூலமே அது நிறை வேறியது.

என்னென்ன காய்கறிகளைச் சாப்பிடலாமென்பது எனக்குத் தெரியும்.

ஆனால் எதை எதைச் சாப்பிடக்கூடாது என்பதைக் கண்டு கொள்ள எனக்கு முன்னால் யார் யாரோ செத்திருக்கிறார்கள்.

அவர்கள் செத்ததைப் பார்த்த பிறகு 'அந்தக் காய்களைச் சாப்பிடக் கூடாது' என்று மற்றவர்கள் கண்டுகொண்டிருக்கிறார்கள்.

சிலரது அனுபவம் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

எத்தனை கதைகள்!

நீயே சம்பந்தப்பட்ட எத்தனை வேதங்கள்;

எத்தனைக் காவியங்கள்!

அனைத்திலும் அனுபவத்தின் விளைவுகளே முன் நிற்கின்றன.

ஆனால் எந்தக் கதையிலும் காவியத்திலும், புதிய புதிய அனுப வங்களையே ஒவ்வொருவரும் கண்டிருக்கிறார்களே தவிர, ஒரே அனுபவத்துக்குப் பல பதிப்புகளை வெளியிட்டதில்லை!

இந்தப் பூமியில் பல்லாயிரம் ஆண்டுகளில் அதற்காகப் பிறந்தவன் நான் ஒருவன்தான்!

மலத்திலே ஒரு காலை வைத்து அது மலமென்று தெரிந்த பின்பும், பிரக்ஞையின்றி மறு காலையும் தூக்கி வைத்தவன் நான் ஒருவன் தான்!

பிரபவ வருஷம், ஆவணி மாதம், ஏழாம் தேதி ஒரு மனிதன் என் கன்னத்தில் அடித்துவிட்டான் என்றால், அடுத்த வருஷம், அதே மாதம், அதே தேதியில், அதே மனிதனிடத்தில், அதே கன்னத்தில் அடி வாங்குவேன்.

என் அனுபவங்கள் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படுகின்றனவே யன்றி, அவை புதிய அனுபவங்களாக இல்லை.

கொக்குக்கு ஒரே மதி.

உயரமான மனிதர்களுக்கும் அதுதானே விதி!

இடிகூட விழுந்த இடத்தில் மறுபடி விழுவதில்லை;

ஆனால் என் அனுபவமோ பட்ட இடத்திலேயே படுகிறது.

ஒரு வகையில் அதுவும் லாபமே!

புதிய புதிய இடங்களில் பட்டால் வலி தெரிந்துகொண்டே இருக்கும்.

ஒரே இடத்தில் பட்டால் அந்த இடம் மரத்துப் போய்விடுகிறதல்லவா!

நெய்யையே ஆகாரமாகக் கொண்ட எறும்பு அந்த நெய்யிலேயே விழுந்துவிட்டால், அதற்கு அதுவே மரணப் படுக்கையாகிவிடுகிறது.

தேனையே உணவாகக் கொண்ட தேனீ தேன் குடத்தில் விழுந்து விட்டால், அதுவே அதன் சமாதியாகி விடுகிறது.

என்கதையும் அதுதான்!
நான் அன்பைச் சேகரிக்கிறேன்;
அதிலேயே விழுந்து மடிகிறேன்;
நான் இரக்கத்தைச் சேகரிக்கிறேன்;
அதிலேயே மூழ்கி அழிகிறேன்;
எனது சவக்குழியை நானே தோண்டுகிறேன்.

ஏன் நான் இப்படியெல்லாம் செய்கிறேன் என்று எண்ணிப் பார்க்கும்போதுதான், என்னுடைய லகான் உன் கையில் இருப்பதாக உணர்கிறேன்.

ஆகவே நீ துரத்துகிற பாதையிலேயே தான் நான் போய்க் கொண்டிருக்கிறேன்.

நான் விழுந்தால் அது உன்னாலே!

நான் எழுந்தால் அதுவும் உன்னாலே!

என்னுடைய எழுச்சியையும், வீழ்ச்சியையும் உன்னுடையதாக வரவு வைத்துக் கொள்ளவும்.

சென்னை-14, நாவல் ஆர்ட் பிரிண்டர்சில் அச்சிடப்பெற்று, சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் பழ. சேது ஆச்சி, 12, ராமாநுசம் தெரு, சென்னை-17, தமிழ்நாடு.
ஆசிரியர்: புலவர் நாகசண்முகம், தொலைபேசி எண்: 445778.

KARUPPAN CHETTIAR ESTATE
A.M. M.K.
KARAIKUDI.

The Executors to the Estate of
A.M. M.K. ... Chettiar.

E.OC...-BC...

உணவே மருந்தாகும்
என்ற உண்மையினை விளக்கும்
ஒப்பற்ற நூல்கள்!

வைத்தியச் சித்தர்
கே. எஸ். லட்சுமணனின்
வாழ்வு நூல்கள்.

ஒவ்வொரு நூலும் உற்ற துணைவன்
உயர்ந்த வைத்தியன்
உடனிருந்து காக்கும் உற்ற நண்பன்.

குழந்தை நோய்களும் மருந்துகளும்	1	50
மாமிச உணவின் மருத்துவ குணங்கள்	1	50
தாது விருத்திக்குத் தன்னிகரற்ற மருந்துகள்	1	50
தொந்தியைக் கரைப்பதெப்படி	1	50
சர்மரோக நிவாரண மருந்துகள்	1	50
மூலரோக நிவாரண மருந்துகள்	1	50
வெள்ளைப் பூண்டு வைத்தியம்	1	50
நோய் நீக்கும் பூக்கள்	1	50
வைட்டமின் காய்கறிகள்	1	25
நோய் நீக்கும் கீரைகள்	1	25
வெ[illegible]ய் [illegible]த்தியம்	1	25

பதினொரு [illegible]களின் மொத்த விலை ரூ. 15-75

[illegible] பணம் அனுப்புவோருக்கு தபால் செலவின்றி [illegible] மூலம் நூல்கள் அனைத்தும் அனுப்பி வைக்[illegible]ம்.

அருள் நிலயம்

17, பர்கிட் சாலை, தி. நகர் சென்னை-17.

தொலைபேசி எண்: 445778